நல்லர் கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆவணி 31 முஹர 11 இதழ் 218

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16-9-1986

## வெளிநாட்டவர் பிரான்ஸ் செல்வதற்கு 'விஸா' பெறவேண்டும்

பாரிஸ், செப்-15

''வெளிநாட்டவர் பிரான்ஸிற்கு வருவதற்கு இனிமேல் விஸா பெறவேண்டும். எனினும் ஐரோப்பிய நாடுகளையும், சுவிற்சர்லாந்தைச் சேர்ந்தவர்களும் விஸா பெறத் தேவையில்லை'' என்று பிரான்ஸ் பிரதம மந்திரி திரு. ஜார்க் ஸீரொக் கூறியுள்ளார்.

பாரிஸில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் பல குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாட்டின் பாதுகாப்பைக் கருதி எல்லைப் பகுதிகளில் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காகச் சுமார் ஆயிரம் பிரான்ஸ் ராணுவப் படை வீரர்கள் அங்கு கடமையில் ஈடுபடுவரென்றும், மேலும் நூற்றுக்கு மேற்பட்ட வீரர்கள் துறைமுகங்களிலும்விமான நிலையங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர் என்றும் திரு ஸீரொக் மேலும் தெரிவித்துள்ளார்.

திரு. ஸீரொக் இந்த அறி

(4-ம் பக்கம் பார்க்க

## தமிழ் அகதிகளுக்கான சர்வதேச விழாவில் தமிழீழ கீதம் ஒலிப்பு!

### மெல்போர்ன் தமிழ்ச் சங்கத்தில் அகதிகள் நிதியம் ஆரம்பம்

தமிழ் அகதிகளுக்கு உதவியளிக்குமுகமாக மெல்போர்ண் பிறெஸ்டன் நகர மண்டபத்தில் ''சர்வதேச இரவு'' என்னும் விழாவொன்று நடைபெற்றது. இவ்விழாவில் தமிழீத்திற்கான பாடல் ஒன்றும் பாடப்பட்டது. வடக்குக்-கிழக்கு மாகாணத்துடன், புத்தளம், சிலாபம் வரையிலான பகுதிகளையும் உள்ளடக்கி தமிழீழத்திற்கான எல்லை குறிக்கப்பட்ட வரைபடமொன்றும் இவ்விழாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்தத் தமிழீழத்திற்கான பாடல் மெல்போர்ன் தமிழர் ஒன்றியத்தினல் பாடப்பட்டது. மெல்போர்ன் தமிழர்ஒன்றியம், விக்டோரியா இலங்கைத் தமிழர் சங்கம், தமிழ் இயக்கங்களின் ஆஸ்திரேலியா சம்மேளனம் உட்பட பல சர்வதேச அறிஞர்கள் இயக்கங்கள் பங்குபற்றின.

இலங்கையிலுள்ள தமிழ் அகதிகளுக்கு உதவியளிப்பதற்கென ஒருங்கிணைந்த விக்டோரியா இலங்கைத் தமிழ் ஒன்றியத்தின் 'அகதிகள் நிதியம்' ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இந்த உதவி மெல்போர்ணிலுள்ள ஐக்கிய தேவாலயத்திற்கூடாக வழங்கப்படும்.

இவ்விழாவில் தமிழர் ஒன்றியங்களின் ஆஸ்திரேலிய சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் சி. ஜே. எலியசர் உரைநிகழ்த்தியதுடன் விக்டோரியா இலங்

(4ம் பக்கம் பார்க்க)

### ● ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு காணமல்போன

# 641 தமிழ் இளைஞர் நிலை பற்றி தகவல் வெளியிட வேண்டும்

## அமைச்சர் லலித்திடம் மட்டு. பிரஜைகள் குழு கோரிக்கை

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஆயுதப் படையினரால் 1986 தை மாதத்துக்கு முன்னரும் பின்னரும் கைது செய்யப்பட்டு காணமல்போன 641 தமிழ் இளைஞர்களின் நிலைமைபற்றித் தெரியப்படுத்தவேண்டுமென்று பிரஜைகள் குழு தம்மை சந்தித்த பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் கேட்டுள்ளது.**

காணமல் போனவர்களின் நிலைமைபற்றி அறிவதற்கு எனவழிவகைகளைக் காண வேண்டும் என்று தெரிவித்தால் அதைத்தாம் செய்வதாகவும், விரைவில் இதுபற்றிய முடிவொன்றை தாம் அறிவிப்பதாகவும் தம்மிடம் அமைச்சர் தெரிவித்ததாகப் பிரஜைகள்குழுச் செயலாளர் தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்றுக்காலை 11 மணியளவில் ஹெலிகொப்டர் மூலம் வந்திறங்கினர்.

கல்லடி ஆயுதப்படை முகாமில் தங்கியிருந்து அமைச்சர் மட்டக்களப்பு அம்பாறை பிரஜைகள் குழுவினரைச் சந்திக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து பிரஜைகள்குழு அமைச்சரைச் சந்தித்து உரையாடியது

பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து ஆகிய இருவரும் அமைச்சரை சந்தித்து பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து உரையாடினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1986 தை மாதத்துக்கு முன்னரும் பின்னரும் ஆயுதப்

(4ம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்தை ஆயுத பலத்தால் மட்டும் வெல்ல முடியாது

— லலித்

கொழும்பு, திங்கள்

''பயங்கரவாதத்தை ஆயுத பலத்தால் மட்டும வெல்லமுடியாது மக்களை அன்பால் வெற்றி கொள்வதுடன் வெளியுலகையும் நாம் எமது செயல்களால் வெற்றி கொள்ளவேண்டும்.

இவ்வாறுகரடியனுறு விசேட அதிரடிப்படை முகாமுக்கு விஜயம் செய்த தேசியபந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி, அங்குபடையினரிடையே உரையாற்றுகையில் கூறினர்.

கல்லடிமுகாமில் ரூபவாஹினி நிருபருக்கு அமைச்சர் பேட்டி அளிக்கையில், சமாதான பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் இந்த விஜயத்தின் நோக்கம் என்ன எனக்கேட்கப்பட்ட போது, படையினர் எத்தகைய சூழ்நிலையில் கடமையாற்றுகின்றனர் என்பதை அறிந்து கொள்வது அவசியம் என அமைச்சர் கூறினர்.

## தமிழர் கலாசார அவையின் கவின்கலையரங்கு

யாழ்ப்பாணம், செவ்

தமிழர் கலாசார அவையினரின் கவின் கலையரங்குநாளை புதன்கிழமை பிற்பகல் யாழ் வின்சர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது

இக்கவின்கலையரங்கில் திரு நெல்வேலி வேல் ஆனந்தன் நாட்டிய அமையம் வழங்கும் நிருத்தியாஞ்சலி, கீதா உபதேசம், இலவசப்பாடல்கள் (விடுதலைக் கீதங்கள்) வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்துக் குழுவினரின் பாரதத்தின் சில காட்சிகள் (பாட்டும்கூத்தும்) நடைபெறவுள்ளன. (மா)

### மக்கள் விடுதலைப்படை

## ஹெலிமீது தாக்குதல்; இரு இராணுவத்தினர் காயம்

யாழ்ப்பாணம், செங்.

மட்டுநகரிலுள்ள கன்னவ்குடாவில் ரோந்துபுரிந்த ஹெலிகொப்டர் ஒன்றின்மீது தமது மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் மேற்கொண்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:.

''நேற்று அதிகாலை மட்டுநகரில் உள்ள கன்னங்குடா எனும் இடத்தில் ரோந்து புரிந்த ஹெலிகொப்டர் ஒன்றின்மீது கலி-30 ரக துப்பாக்கியினுல் மக்கள் விடுதலைப் படையினர் தாக்குதல் மேற்கொண்டனர்.

''இத்தாக்குதலுக்கு இலக்கான ஹெலிகொப்டர் அவசர அவசரமாக அண்மையிலுள்ள ராணுவ முகாமில் தரையிறக்கப்பட்டது இதில் விமான ஓட்டிகளாகப் பயணம்செய்த இரு ராணுவத்தினரும் காயமுற்று மட்டுநகர் பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. ஹெலிகொப்டருக்கு ஏற்பட்ட சேதம்பற்றிய பூரண விபரங்களைப் பெறமுடியவில்லை''. (மா

### மட்டு. படுவான்கரை கிராமம்மீது

## விமான றெக்கட் தாக்குதல்: பல வீடுகள் சேதம்;

### பலர் பலியென அச்சம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படுவான்கரையில் உள்ள கிராம மக்கள் மீது நேற்று மூன்று விமானங்கள் றெக்கட் தாக்குதல் மேற்கொண்டன. இதனைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களும் நடைபெற்றன. இத்தாக்குதலால் வயோதிப மாது ஒருவர் பலியானுர்.

நேற்றுப் பிற்பகல் 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை 3 விமானங்களும் 16 றெக்கட்டுகளை படுவான்கரை கிராமங்களை நோக்கிவீசின.

இத்தாக்குதல்களால் பல வீடுகள் சேதமடைந்திருக்கலாம் என்றும் பலர் பலியாகியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

கடந்த 6 நாட்களாக படுவான்கரையில் முகாமிட்டிருக்கும் ஆயுதப்படையினரை வெளியேறவிடாது போராளிகள் தொடர்ந்து தாக்குதல் நடாத்திவருவது தெரிந்ததே.

நேற்றுமுன் தினமிரவு எழுவான்கரையையும் படு

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கருகாமையில் பொலிஸ் ஸ்ரேசனுக்கு முன்பாக 1½ பரப்பு காணி சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: M. இராமச்சந்திரன், 4ம் கட்டை, ஆனைக்கோட்டை. (C 4654)

புத்தம்புதிய Deep Freezer, வெளிநாட்டு (பெரிது) Suit Case, வீட்டுப் பாவனைக்குரிய தேக்கு Show Case ஆகியவை உடன் விற்பனைக்குண்டு. மு. கமலநாதன், 47, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (C 4659)

மைசூர் அரிசி நம்பர்-1 கசிவில்லாதது, சுத்தமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி 3ம் ஒழுங்கை வீதி அருகாமையில் 2 பரப்புக் காணி. புதிதாகமறுசீர் அமைக்கப்பட்ட உழவு இயந்திர இணைப்புப்பெட்டி ஒன்று விற்பனைக்குஉண்டு. தொடர்பு: 32/1, சீனி வாசகம் வீதி, கொட்டடி. (C-4602)

வீட்டுத்தளபாடங்கள், கசற்டெக்செற், Sanyo speakers, Bread Toaster, தட்டச்சுயந்திரம் கிளாஸ் Show case, ஹோல் செற், சிங்கர் Zig Zag தையல் மெஷின், வயலின், லேடிஸ் சைக்கிள், Stabilizer, Vono spring twin b ds. Foam மெத்தைகள், லிபிகிளாஸ் வகைகள், மற்றும் பல உடன்விற்பனைக்கு. 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். St. Charles பாடசாலையருகில். (C-4619)

## தேவை

சிறிய பலசரக்கு கடை ஒன்றுக்கும் வீட்டிற்கும்உதவியாக இருக்கக்கூடிய பையன் தேவை. உணவு, உறைவிடம், சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. C 4651, C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (C 4651)

## கல்வி

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆண்டு ஏழுக்கு 1987 இல் அனுமதி கோர விண்ணப்ப முடிவு 22-09-1986. பிரவேசப் பரீட்சை 25-10-1986இல் நடைபெறும். கடந்த ஆறுண்டுப் பரீட்சைகளின் 12 வினுத்தாள்களும், 30 தமிழ்க் கட்டுரைகளும் கொண்ட பரீட்சைத் துணைநூல் ரூபா 12-50. உங்கள் புத்தக வியாபாரியை அணுகுக. C 4627

## வகுப்புகள்

ஆரம்பம் 16-9-86 A/L 87 பௌதிக கணித மீட்டல் ஆசிரியர் ரவிந்திரநாதன் Time Tue and Thurs 4-00 p.m 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [P.M.C முன்பாக [C 4604]

## சேவை

வாட்டப்பம் மோட்டர், மின்விசிறி, கிறைண்டர் அடுப்பு, ரான்ஸ்போமர், வாசிங் மெஷின், ஸ்ராட்டர் றிப் சுபிச் ஆகியவை திருத்த, றீவைண்டிங் செய்ய- Omega, Manipay Road, Jaffna. [ஈழநாட்டிற்கு எதிரில்] பழுதடைந்த உபகரணங்கள் விலைக்கும் வாங்குவோம். [C 4564]

## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வு, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகாலநரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய் காலவேதனைகள், மகப்பேற்றின்மை, குழந்தைகட்கும் சித்த ஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R மங்களாம்பிகை D A M., Dr R. இலட்சுமண ஐயர் D.A.M. மங்களபதி வைத்தியசாலை, பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி, 41/5, சங்கிலியன் வீதி, நல்லூர். [C 4580]

கலர் பிலிம் சுருள்களை PROCESSING & PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ (A 1041)

## 2-வது பிறந்ததின வாழ்த்து



செல்வி நிருஷா தனபாலசிங்கம்

புளியங்கூடல் தெற்கு தனபாலசிங்கம் செல்வராணி தம்பதிகளின் செல்வப் புதல்வி நிருஷா தனது 2-வது பிறந்ததினத்தை இன்று [16-9-86] கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மாபெரியப்பாபெரியம்மாமாமாமார் அத்தைமார் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். C 4634

## தவறிவிட்டது

இரத்தினம் சரோஜநாயகியம்மா, இரத்தினம் வசந்தமாலா, 749, செல்வநாயகபுரம், உப்புவெளி, திருகோணமலை என்பவர்களின் அடையாள அட்டைகள் யாழ்ப்பாணத்தில் 15-09-86ல் பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். இவர்கள் திருகோணமலையிலிருந்து அகதிகளாக வந்தவர்கள். அடையாளஅட்டை இன்மையால் அகதிச்சாமான்கள் எடுப்பதில் சிரமம் அடைகிறார்கள். A. G. A, s' Road, சுன்னுகம். (C 4650)

இல. 601290650 X கா. சுகுமாரசர்மா, வட்டாக்கை, கந்தரோடை, சுன்னுகம் என்பவருடைய அடையாளஅட்டை பேர்சுடன் 15-9-86ல் சுன்னுகத்திற்கும் தாவடிக்குமிடையில் கே. கே. எஸ். வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கோ அல்லது ''துர்க்கா ஸ்ரேசனேர்ஸ்'', பஸ் நிலையம், சுன்னுகம் என்ற விலாசத்திலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C 4657)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



இராமதாஸ் நிஷாந்தன்

வவனியா 2-ம் குறுக்குத் தெருவை சேர்ந்த D. R. இராமதாஸ்-மங்களேஸ்வரி (ரதி) தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிஷாந்தன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று [16-9 86] குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை பல்கலையும் பெற்று நீண்டகாலம் வாழ வாழ்த்துபவர்கள் அப்பா, அம்மா, பேரன் பேத்திமார்களான பருத்தித்துறை சுப்பிரமணியம் [இளைப்பாறிய விவசாயத் தணைக்கள உத்தியோகஸ்தர்], மகேஸ்வரி அப்பம்மா, செல்லத்துரை [பிரபல வர்த்தகர் வவனியா], செல்லனச்சியார் அம்மம்மா, பருத்தித்துறை சண்முகநாதன் மாமா, மாமி, விஷயதாஸ் சித்தப்பா, யாழ்ப்பாணம் மகேஸ்வரன் மாமா, மாமி, சிவனேஸ்வரன் மாமா, மாமி, லக்குனேஸ்வரன் மாமா, மாமி, கனடா ராஜேஸ் மாமா, மாமி, சுவிஸ் மங்களா மாமா, யோகா அன்ரி, மச்சான்மார்கள், மச்சாள்மார்கள் மற்றும் உற்றூர், உறவினர்கள். C 4468


PEOPLE'S PUBLISHING HOUSE Ltd.

மக்கள் பிரசுராலயம், யாழ் கிளை

15/1, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம் விஞ்ஞானம், கணிதம், இரசாயனம். பௌதிகம், அரசியல் சம்பந்தமான புத்தகங்களும், சிறுவர்களுக்குரிய புத்தகங்களும், பெரியவர்களுக்குரிய நாவல் - கதை புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். எமது புத்தகங்கள் கவர்ச்சியானவையும். அன்பளிப்புக்கு உகந்தவையாகவும், விலையில் குறைந்தவையாகவும், தரத்தில் கூடியவையாகவும் உள்ளன. எனவே ஒருமுறை விஜயம் செய்யுங்கள் உண்மை விளங்கும்.

[A-1330] முகாமையாளர்,



யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை

ஆகஸ்ட் 1987 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தரபரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புக்களில் சேரலாம். பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 10-9-86ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(A 1130) தொலைபேசி எண்: 22617



பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ இத்தாலி
★ ஜேர்மனி ★ சுவிஸ்

ஆகிய நாடுகளிற்கு இங்கிருந்து 23ம் திகதி அழைத்துச் செல்ல உள்ளார்.

உடன் கடவுச்சீட்டுடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும்

பாஸ்போட், பொண்டிங், ரிக்கற்றிங், விசா, என்பனவும் குறைந்த செலவில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

லிப்ருஸ் லிமிற்ரெட்

R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[A-1329]



சோஷலிச புரட்சியின் அவசர அவசியம்

லெனின் புதிய சகாப்தத்தின் ஆழ்ந்த பகுப்பாய்வை வழங்கிய முதலாவது மார்க்ஸிஸ்ட் ஆவார். இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் முதலாளித்துவம் புதியதொரு கட்டத்தை, ஏகாதிபத்தியத்தை அடைந்துவிட்டது. அது உலகில் மிகப் பெரும்பான்மையான மக்கள் மீது விரல் விட்டெண்ணக்கூடிய ஒருசில முன்னேறிய நாடுகள் கலோனியல் ஒடுக்குமுறையை, நிதிநசுக்கலை உண்டுபண்ணும் உலக வியாபகமானதொரு அமைப்பாக மாறிவிட்டது என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

முதலாளித்துவத்தின் புதிய ஏகாதிபத்தியக் கட்டத்தின் அம்சங்களது நுணுக்கமான பகுப்பாய்வின் அடிப்படையில் லெனின், ஏகாதிபத்தியத்தின் ஆழவேரோடிய முரண்பாடுகளும், புண்களும் குணப்படுத்த முடியாதவை என்பதையும், ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவம் அழிவுற்றுச் செத்து சமுதாயத்தை சோஷலிசத்திற்கு கொணர்கிறது என்பதையும் நிரூபித்து காட்டினார்.

முதலாளித்துவத்தின் பிறப்பு, வளர்ச்சி, அழிவு பற்றியும் இவை ஆகும் முறைபறறி அறியவும், சோஷலிசப்புரட்சியின் அண்மையையும், நடைபெறக் கூடிய சாத்தியப்பாட்டையும், அவசர அவசியத்தையும் பற்றிய அறிவைப் பெறவும் நம்நாட்டின் சோஷலிச இயக்கத்தின் முன்னேடிகளில் ஒருவரும் சட்டத்தரணியுமாகிய த. துரைசிங்கம் எழுதிய ''லெனினும் ஆசியாவும்'' என்ற நூலைப் படியுங்கள்.

இந்நூலின் தமிழ், சிங்கள, ஆங்கிலப் பதிப்புகள் புத்தகசாலைகளில் கிடைக்கும்.

விலை ரூபா 10/-

சோஷலிச ஆய்வுக் கழகம்,

31, வில்சன் வீதி, கொழும்பு-12.

(A-1279)

**மணிவாக்கு**

உண்மையும் எண்ணெயும் வெளிவரும் தன்மையன;

ஸ்பானிய பழமொழி

# நமதுநோக்கு

## வெறும்பானை பொங்குமோ?

'செய் தீவினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்த வருமோ இருநிதியம்' என்கிறார் மூதாட்டி ஔவை; அதே பாட்டில் வரும் கடைசி வரியே இன்றைய தலையங்கம்.

'சோஷலிச ஆட்சியை அமைத்து வறுமையை விரட்டிவிடுவோம்' என்று 1970ல் அமோக வெற்றியுடன் வந்த சிறிலங்கா சுதந்திர முன்னணி ஆட்சிக்கு எடுத்த எடுப்பிலேயே தென்இலங்கைத் தீவிரவாதம் முதற்குட்டுப்போட்டது; அது தணிந்தபோதும் நாட்டில் வறுமை வேகமாக வளர்ந்துவந்தது.

நோய் முற்றித்தான் குணப்படும் என அன்றைய நிதியமைச்சர் டாக்டர் என். எம். நோ மனி) பெரேரா ஆணையிட்டார், ஆயுர்வேத வாகடத்தில் அத்தகைய சிகிச்சைமுறை சித்தர்களால் பாடப்பட்டது. மக்கள் சற்றே நம்பி வாழ்ந்தனர்.

பெரிய நோட்டுகள் (நூறு ரூபாய், ஐம்பது ரூபாய்) செல்லாதெனவும் அவற்றை வங்கிகளில் கையளித்து புதிய நோட்டுகள் பெற வேண்டுமென்று அன்றைய நிதியமைச்சர் பிரகடனப்படுத்தினர். மூலைகளில் மறைந்து வாழ்ந்த வயோதிப மாதுகளை (பெரும்பாலும் சிங்களவர்) வங்கிகளுக்கு முன்னால் தவம் கிடக்க வைத்தார்

கடைத்தெருக்களில் மிக அவசியமான பண்டங்கள் கிடைக்கவில்லை. இதற்கு மேலாக எந்தக் கடையிலும் உயிரைக் காக்கும் பாண் காலை 6 மணிக்கு மேல் கிடைக்கவில்லை; நோய் முற்றிய நிலை. இன்றைய முதுயோர் - வளர்ந்தவர்கள் - இனிவரும் இளஞ்சந்ததிக்காக வயிற்றை வாயைக் கட்டுவது தவிர்க்கமுடியாதது மட்டுமல்ல தேசியப் பணி; தியாகச் செயலென்று விளக்கமளிக்கப்பட்டது.

நீண்டகதையைச் சுருக்கிக் கூறினால், 1977 பொதுத் தேர்தல் வந்ததும் இவ்வித கண்டிப்பான (Control) பொருளாதாரம் பேசி நாட்டைச் சூறையாடிய ஆட்சி மண்கவ்வியது

ஆத்திரப்பட்ட மக்கள், யார் ஆட்சிக்கு வந்தாலென்ன இந்தக் 'கள்வர் கூட்டம்' கலைக்கடவேண்டுமென்றே ஒட்டுப் போட்டனர்; இது ஆங்கிலத்தில் 'Angry vote' என்று சொல்லப்படும்.

ஏழுவருடம் பயன்பட்டு வந்த நெய்க்குடம் உடைந்ததும், ஜேஆரின் தலைமையில் ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தது வியப்பில்லை. அமோக வெற்றி கடந்த ஆட்சியின் கொடுமையை நிரூபித்தது.

வெறும் வயிற்றைக் கட்டுவதால் நோய் குணமாகாது; மலச்சிக்கல் அதிகரிக்கும்; எனவே புதிய ஆட்சி கட்டுப்பாடற்ற (திறந்த) பொருளாதாரம் என்ற குளிகையைப் பரிமாறியது.

மலச்சிக்கல் நீங்கியது மட்டுமல்ல, நல்ல பசி அதற்கேற்ற ஆகாரம் எங்கும் கிடைத்தது. பாணுக்கு பரிதவித்த ஏழைகள் - பருத்தித்துறை தொடக்கம் மாத்தறை வரைச்கும் - எவ்வித முட்டுமின்றி பசியாற வழிபிறந்தது

பசிவந்தால் பத்தும் பறந்துபோமென்ற பழமொழியையே கார்ல் மார்க்ஸ் முனிவர் பொருளாதார ரீதியில் ஆராய்ந்து தமது புதிய (பழைய?) தத்துவத்தை நிறுவினர். அதனை உணராத அவர் நாமத்தை உச்சரித்துவந்த இடதுசாரிக்கட்சிகள் இந்நாட்டுமக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் இழந்தனர்.

சிதீர்க்க வந்த ஐ தே. கட்சி அத்துடன் நிற்கவில்லை பணம் சம்பாதிக்க வேண்டுமே, பணத்திலேயே நாட்டின் ஆட்சி பலமும் மக்களின் சுபிட்சமும் தங்கியிருக்கிறதென்ற ஞானம் படைத்த தலைவர்கள் ஐ தே. கட்சியின் சித்தாந்தத்தை மக்களுக்கு விளக்கினர்.

மார்க்ஸ் முனிவர் சொன்ன அடிப்படைக் கருத்தை செயற்படுத்தும் பொறுப்பு இடதுசாரிகளுக்குத்தான் சொந்தமா?

தடிப்பான வலதுசாரிகள் தலைவர் ஜே. ஆரைப் போன்ற சோஷலிசவாதிகள் என்ன சொன்னார்கள்?

''பொருளே உலகின் பெருங்கர்த்தா; மக்கள் உறவுகளை நிறுவுவது பொருள், பெற்றோர் உடன்பிறந்தோர் உறவோர், நண்பர் மனிதனின் தனி வாழ்விலும், ஆட்சியாளர் நாட்டின் பொதுவாழ்விலும் பொருளையே பிரதானமாகக் கொண்டிருக்கின்றனர்'' என்பது இன்றைய ஆட்சியின் சித்தாந்தம்.

இதனையே மூதாட்டியும் குறிப்பிட்டிருப்பதால் பொருள்தேடும் வேட்டையில் உருசிகாட்டியது பத்து வருட முடிவை அண்டி நிற்கும் ஐ. தே. ஆட்சி. வைத்தியர்களை மாறறுவதில் நம்பிகைகொளளவில்லை. எனவே நிதியமைச்சர் ரொனி நாட்டின் பொருளாதார நோய்க்கு டலவிதப்பட்ட குளிகைகளை மாறிமாறி பரிமாறுகின்றார்.

இன்று வாஷிங்டன் செல்லும் நிதியமைச்சர், திறந்த பொருளாதாரம்ஆபத்தான நிலையை அடைந்திருப்பதாக எச்சரிக்கின்றார். பிற நாட்டு மூலதனம் உள்நாட்டு பயங்கரவாதத்தால் முற்றாக முடங்கிவிடும் என்கிறார்.

மலச்சிக்கல் மாற உதவிய மருந்து வாந்தி பேதியைக் கொண்டுவந்திருக்கிறது வடக்கில் பயங்கரவாத வாந்தி, தெற்கில் அதிவேகமாகப் பரவும் பேதி இரண்டும் ஆட்கொல்லிகள். சண்டை நின்றால் வயிற்றோட்டமும் நிற்கும்.

தமது எண்பதாவது பிறந்ததினத்தை நாளை கொண்டாடும் ஜனாதிபதிக்கு நாட்டின் அபை திக்குவேண்டிய அரசியல் ஞானத்தை ஆண்டவன் அருளவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

# இலங்கையில் மனித உரிமை மீறல்:
# ஏதுவாயுள்ள காரணங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

இலங்கையில் சித்திரவதைகள், தடுத்துவைக்கப்பட்டிருக்கையில் மரணம் .... இப்போது இந்த காணமல் போகும் சம்பவங்கள்... இவை போன்ற மனித உரிமை மீறல்கள் நடைபெற பல காரணிகள் ஏதுவாயுள்ளன.

காவலில் வைக்கப்படுவோரைப் பாதுகாக்குமுகமாக உருவாக்கப்பட்ட பல முக்கிய சட்டவிதிகளை அவசரகாலச் சட்டத்தின்கீழ் நிறுத்திவைத்தமை — இதன்விளைவாக கைதிகள் வெளியுலக தொடர்பின்றி நீண்டகாலமாக வைத்திருக்கப்படலாம். 'காணமல் போகும்' சம்பவங்களை விசாரணைசெய்வதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மறுப்பு. இவற்றுக்குப் பொறுப்பான படையினரைக் கண்டுபிடித்து அவர்களை சட்டத்தின்முன் நிறுத்தாமை போன்றவை இவற்றுட் சில.

### சட்டரீதியிலான பாதுகாப்பு விதிகளின் நிறுத்தம்

பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச்சட்டம் இவையிரண்டும் (ஒருவரை) வழக்குத் தாக்கல்செய்யாமல், வெளியுலக தொடர்பின்றி நீண்டகாலத்துக்கு அமைச்சன் ஆலோசனைக்கமைந்த இடத்திலும், நிலைமைகளிலும் வைத்திருக்க உதவுகின்றன. ப. த. சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்படக்கூடிய அதிகபட்சகால எல்லை 18 மாதங்கள் அவசரகால விதிகளின் கீழ் காலவரையின்றி காவலில் வைத்திருக்கலாம். கைதுசெய்யப்படுவதற்கான காரணங்கள் கைதுசெய்யப்படுவோரிடம் தெரிவிக்கவேண்டியதில்லை அத்துடன் இலங்கையின் சாதாரண சட்டவிதிகளைப்போல் 24 மணிநேரத்தினுள் நீதவான் முன்னிலையில ஆஜர்படுத்தவேண்டிய அவசியமுமில்லை.

இதுபோன்ற காரணங்களினால் கைதுசெய்யப்படுவோர் மீது எதுவித சட்ட ரீதியான அல்லது வேறு சுயாதீனமான ஆதிக்கம் கிடையாது. ப. த. சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள், விதிகளுக்கமைய உறவினர்களாலோ அல்லது வழக்கறிஞர்களாலோ குறிப்பாக விசாரணை நடக்கும் ஆரம்பகட்ட சிறைவாசத்தின் போது பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. கைதுசெய்யப்படுவோர் பற்றி அவரது உறவினருக்கோ அன்றி அம்மாவட்ட அரச அதிபருக்கோ 48 மணி நரத்தினுள் அறிவிக்கப்படுமென தேசிய பந்தோபஸ்து அமைச்சர் 84 ஜூனில் உறுதியளித்திருந்தாராயினும், பல சந்தர்ப்பங்களில் இத் தகவல் உரியவருக்கு அளிக்கப்படுவதில்லையென்றும் கைதுசெய்யப்பட்டு பலமாதங்களாகியும் பெற்றோர் தமது பிள்ளைகளின் நிலையை அறிய முடியாதுள்ளதெனவும் பல புகார்கள் அம்னெஸ்ரி இன்டர்நஷனலுக்குக் கிடைத்துள்ளன.

**'கைதுசெய்வோரை வெளியுலகத் தொடர்பின்றி ரகசியமாக வைத்திருத்தல், மனித உரிமைகள் மீறப்படுவதை ஊக்கமளிக்கிறது...'**

தினை காட்டுகிறது. அத்துடன் ஏனைய மனித உரிமை மீறல் விடயங்களில் நடந்தது போன்று மக்களைக் 'காணமல் போக'ச் செய்வோரைக் கண்டுபிடித்து அவர்களை நீதியின் முன் அரசாங்கம் நிறுத்தியதாகத் தெரியவில்லை.

'காணமல்போன' பலரின் நிலையை தெளிவுபடுத்துமாறு அரச அதிகாரிகள் பலமுறை வேண்டுகோள் விடுத்தும் அரசு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

தொகுப்பு: செந்தில்

மன்னார் அரச அதிபர்' பணிமனையைச் சேர்ந்தவிசேட சேவை அலுவலர் திரு. தோமஸ் மிராண்டா, 'காணமல்போனது' குறித்து விசாரணை நடத்துமாறு அம்மாவட்ட அமைச்சர் கோரியிருந்தார், ஆயினும இதுவரை விசாரணை நடைபெறவில்லை என்பதே எமக்குக் கிடைத்த தகவல்.

83 முதல் 'காணமல் போன' பலரில் ஒருசிலர் பற்றிய விசாரணைகளையே இதுவரை அரசாங்கம் நடத்த உத்தரவிட்டுள்ளது. இத்

# அம்னெஸ்டி இன்டர்நஷனல்
## தரும் ஆதாரம் – V

கிழக்கு மாகாணத்தில் காவலில் வைக்கப்படுவோரின் பெயர்ப்பட்டியலைத் தயாரிக்குமாறு தே ப, அமைச்சு பணித்துள்ளது. இவ்விதி கடைப்பிடிக்குமாயின் காணமல் போதலுக்கு எதிராக பாதுகாப்பளிக்கும் ஒரு அம்சமாக இது விளங்கக்கூடியதுடன் பாதுகாப்புப்படையினர், தமது காவலில் உள்ள கைதிகளுக்குப் பொறுப்புத்தாமே என்ற நிலையையும் உருவாக்கும். ஆயினும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவ்விதி கடைப்பிடிக்கப்படுவதில்லை. அத்துடன் 'காணமல் போயுள்ளனர்' என்று கூறப்படுபவரின் நிலையை அறிய விசாரணைகள் நடத்துவதல் அரசாங்கம் மிகுந்த தயக்கத் தகைய விசாரணைகள்கூட பொலிஸ் அல்லது ராணுவத்தினரால் அவர்களின் சக அதிகாரிகளுக்கெதிரான புகார்கள் விசாரிக்கப்பட்டன. விசாரணைகளின் முடிவு பெரும்பாலும் வெளியாவதில்லை.

இதேவேளை, அரசாங்கம், தனது கவனத்திற்குக்கொண்டு வரப்பட்ட 'காணமல்போயுள்ளோர்' விஷயங்களை விசாரணை செய்யாமல் ஒன்றில் (காணமல் போனவர்) கைது செய்யப்படவில்லைஎன்றோ அல்லது அவர்களுக்கு என்ன நடந்ததென்பதை தெளிவுபடுத்த மறுத்தோ அல்லது அவர்களுக்கு என்ன நடந்ததென்பது பற்றி பிழையான தகவல்

[7ம் பக்கம் பார்க்க]

## 'காணமல் போன' ஒரு சிங்களவர்

திரு. ஆனந்தா சுனில் - இவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர். மணமுடித்து இரு பிள்ளைகள் உண்டு

83-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி ஊரடங்கு உத்தரவு அமுலிலிருந்த போது இரவு 10 மணியளவில் கொழும்பிலுள்ள அவரது வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த 3 பொலிஸார், படுக்கையறையிலிருந்த அவரை ஜீப்பில் ஏற்றிச் சென்றனர். காரணம் எதுவும் தெரிவிக்கப்படாமையிலேயே அவர் கொண்டு செல்லப்பட்டார் அங்கு வந்த பொலிஸாருக்குத் தலைமை தாங்கியவர் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுபபதிகாரி என 3 சாட்சியங்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது

ஊரடங்குச்சட்டம் ப்போது அமுலிலிருந்த போதும் சுனிலின் உறவினர்கள் கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது அவரின் நிலைபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அடுத்தநாள் சுனிலின் உறவினர்கள் கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் புகாரொன்றைப் பதிவு செய்ததையடுத்து ஆகஸ்ட் 8-ம், 9-ம் திகதிகளில் பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

சுனிலின் நிலையை பொலிஸ் விசாரணை தெளிவுபடுத்தாததையடுத்து மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் போது சாட்சியங்கள் அடையாளம் காட்டிய பொலிஸாரினால் சுனில் கைது செய்யப்பட்டாரென்பதை அரசதரப்பு வழக்கறிஞர் மறுத்தே வந்தார். அத்துடன் சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரி கைது நடந்த சமயம் தான் கடமை நிமித்தம் வேறு இடம் சென்றிருந்ததாகக் கூறினர் — ஆயினும் இக்கூற்று விசாரணை நடத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றினால் பணிக்கபட்ட கொழும்பு பிரதம நீதவானினால் 'திருப்தி ரமாக இல்லை' யென அவரது தீர்ப்பில் கூறப்பட்டது அத்துடன் சுனிலை கைது செய்த பொலிஸாரை அடையாளம் காட்டியோர் பின்னர் தமது சாட்சிய வாக்குமூலங்களை வாபஸ் பெறுமாறு பயமுறுத்தப்பட்டனரென 'அம்னெஸ்ரி இன்டர் நஷனலு'க்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸாரினால் திரு. சுனில் கைது செய்யப்பட்டாரென்பதை நீதவான் உறுதிப்படுத்திக் கொள்ளும் விதத்தில் திருமதி சுனில் சாட்சியங்களை வழங்க தவறிவிட்டார் என்ற அடிப்படையில் வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

## இவர்களுக்கு 30ம் திகதி வரை நிவாரணம்

வல்வெட்டித்துறை, செவ் கிழக்கில் நடைபெற்றுவரும் வன் செயல்களினுல்குடி பெயர்ந்து அகதிகளாக வல்வெட்டித்துறையில் தஞ்சமடைந்திருக்கும் பன்குளம், நிலாவெளி. கும்புறுப்பிட்டி சம்பூர், ஈச்சலம்பத்தை, சாம்பல்தீவு, கிளிவெட்டி குச்சவெளி, கட்டைபறிச்சான் கங்குவெளி ஆகிய கிராமங்களிலிருந்து அகதிகளாக வந்திருப்போர்க்கு நிவாரண உதவி உணவு விநியோகப் படிவம் இம் மாதம் 30ம் திகதிவரை வல்வை அகதிகள் புனர்வாழ்வு சங்கத்தினரால் வழங்கப்படவுள்ளது.

ஏனைய கிராமங்களிலிருந்து வந்தவர்களுக்கு 15ம் திகதியுடன் படிவம் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



சிங்கராயர் கிலீற்ரஸ் (பிரேமதாஸ்)

ஆண்டவன் படைப்பு: 30-03-1964

ஆள்பவன் பறிப்பு: 16-09-1985

''கல்லறையில் உம்மை வைத்தோம் கண்ணீரால் மூடிவிட்டோம்''

தமிழினத்தின் விடுதலைக்காக துடியாய் துடித்த இளஞ்சுடரே, நீர் மறைந்து ஓராண்டு ஆனாலும் உன் நினைவு உறைந்தது எம் நெஞ்சில்.

ஆன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று செவ்வாய்கிழமை மாலை 5 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

பெற்ரேர், சகோதரர், உற்ருர், உறவினர்.

29/1, பழைய பூங்காவீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். C 4658

**லிடோ**
தினசரி காலை 10-30, மாலை 2-30, 6-30
சிவாஜி மஞ்சுளா நடித்த
**உத்தமன்**
[புதிய பிரதி]
18-ம் திகதி முதல் பிரபு, நளினி நடித்த,
**நியாயம்**
(கலர், புதிய வெளியீடு)

**வெலிங்டன்**
10-30 2-30, 6-30
தியாகராஜன் கில்க் சுமிதா ஜெய்சங்கர்—பானுசந்தர் நடித்த
**நீங்கள் கேட்டவை**
(கலர்) புதிய பிரதி

## மீண்டும் தெரிவு

நியுயோர்க், செப். 15

இலங்கையின் பிரபல அரசியலமைப்பு சட்டத்தரணியான கலாநிதி ஜோசப் ஏ குரே ஐ. நா. சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்க மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது முறையாக இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கலாநிதி குரே மேற்படி அமைப்பின் 18 அரசியலமைப்பு வழக்கறிஞர்களில் ஒருவராவர்.

## வெளிநாட்டவர்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விப்புக்களைத் தெரிவிப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் பாரிஸில் மேலும் ஓர் இடத்தில் குண்டுவெடித்து ஒரு பொலிஸ்காரர் பலியானதுடன், மேலும் இருவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத குற்றச் செயல்களுக்காகப் பிரான்ஸில் சிறை வைக்கப்பட்டிருக்கும் மூன்று லெபனுன் நாட்டவரை விடுவிக்கக் கோரும் குழுவொன்றே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களுக்குப் பொறுப்பெனநம்பப்படுகிறது.

இதற்கிடையில் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு ஆதரவாகச் செயற்பட்டுவருகிருர்கள் என்று கருதப்படும் பன்னிரெண்டு லெபனுன் நாட்டவரைப் பிரான்ஸைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி-எ)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ் நாட்டின் அசம்பாவித செயல்களினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க புனர்வாழ்வு அமைச்சு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்டு அகதிகளாகி இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ளவர்களுக்கும், வடக்குக் கிழககில் போர் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்கவும், புனர்வாழ்வளிக்கவும் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து அவர்களின் நிலைவரம் சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் புதிய விண்ணப்பப் படிவங்களை விநியோகித்துப் பெற்றுக்கொள்ள அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்திலும் பாதிக்கப்பட்டோர் விபரங்களை அறிய புதிய விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளன. யாழ் சமூகசேவைப் பகுதி இப்புதிய விண்ணப்பப் படிவங்களை விரைவில் தயாரித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு விநியோகிக்கவுள்ளதெனத் தெரியவருகிறது. [ச]

## அரச அதிபர் நடவடிக்கை

கிளிநொச்சி, திங்கள் இரணமடு பாரதிபுரம் முதலான பகுதி மக்களின் நலனை முன்னிட்டு கண்டாவளையில் இயங்கும் கிளிநொச்சி உதவியரசாங்க அதிபர் பணிமனையை வாரத்தில்இரு தினங்கள் இரணைமடுச்சந்தியிலுள்ள விவசாய சேவைக்கால பயிற்சி நிலையத்தில் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தூதுக்குழுவினரிடம் தெரிவித்துள்ளார்.

## தமிழ் அகதி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைத் தமிழர் சங்கத்தின் உப-தலைவர் எஸ். ரவீந்திரன் நன்றி கூறினர்.

இவ்விழாவில் ஆங்கிலத்தில் பாடப்பட்ட தமிழீழ கீதத்தின் தமிழாக்கம் பின்வருமாறு;

ஓ! எனது மக்களே
உலகளாவி இருப்பவர்களே,
நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும்
தமிழீழம் உதயமாகும்
நாளுக்காகக் காத்திருங்கள்
''ஓ கடவுளே மீண்டும் வரும்-
எமது காலவரையற்ற இந்த
நாட்டிற்கு எமது மக்கள்
படும்துயரையும்பாரும்-
அவர்களின்கனவுகள்
சொல்லொணுத்
துயரில் ஆழ்ந்துள்ளன.
அவர்களின்இதயத்திலும்
ஆத்மாவிலும்நம்பிக்கைகள்
நீராகப் புரையோடுகின்
றன. அதிகளவில்வழங்கும்
மக்களுககு
சொற்கண் ஒருபொழுதும்
போதுமானதாக இருக்க
முடியாது.
எமது இளைஞர்கள் அதிக
முயற்சியில் எழுந்துள்ளனர்.
எமது இளைஞர்கள் அதி
வேக முயற்சியில்
எழுந்துள்ளனர்.
நாளைய மண்ணிற்கு தமது
உயிர்களை அவர்கள்
கொடுத்துள்ளனர்.
இதனை எவராவது !எப்போ
தாவது அறிவார்களா-
இந்த வலிமைமிக்க இதயங்
களைக் கொண்டஎமது
இளைஞர்களை?
மிக ஆழத்திலிருந்து நாங்கள்
தாகக் குரலைக்கேட்கின்
ருேம்.
வலிமைமிக்க இதயங்களே
தொடருங்கள்உங்கள்
பணியை.
எமதுமண்ணில் உங்கள் முரசு
ஒலிக்கும்.
உங்கள் ஆத்மீகசக்தி
தொடர்ந்துநீடிக்கும்.

ஓ! எமது தாய்நாடே! யாழ்ப்பாணத்திற்கும் வரண்டமன்னுருக்கும்வன் னிக்கும் நீதாகங்கொள்-அத்துடன்மீன் பாடும் தேன் நாடாம் மட்டு நகருக்கும் நீல வாவியைக் கொண்ட திருமலைக்கும் நீ நக்காகத் தாகங்கொள். கௌரவத்துடனும் அந்தஸ்த்துடனும் ஒரு நாளைக்கு முழுமைசான நியாயமான சுதந்திரத்தைநாம்மீண்டும்அனுபவிப் போம்!''

## விமான--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வான் கரையையும் இணைக்கும் பாலம்குண்டுவைத்துதகர்க்கப் பட்டது.

இது இவ்வாறிருக்க ஆயுதப் படையினர் தூண்டி கிராமத்தில் முகாமிட்டிருப்பதால் அதனைச் சுற்றிவரவுள்ள 5 கிராமங்களிலுள்ளமக்கள் உணவின்றி தவித்து வருகிருர்கள்,

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகி பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

10 ஆயிரம் ஏக்கர் நிலம் வேளாண்மை அறுவடை செய்ய முடியாமல் பாழாகிப் போகிறது. [மா]

## சிரமதானம்

பண்டத்தரிப்பு, செவ். குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு சீர்கெட்ட நிலையில் இருந்துவரும் பண்டத்தரிப்பு-தொட்டிலடி வீதியை சிரமதானம் மூலம் திருத்தியமைப்பதற்கு இளவாலை - யாழ்ப்பாணம் மினிபஸ் உரிமையாளர் சங்கம் நடவடிக்கைமேற்கொண்டு வருகின்றது. (வா)

## முதலுதவிப் பயிற்சி

யாழ்ப்பாணம், புதன் சென், ஜோன் முதலுதவிக் குழுவினரால் நடாத்தப்பட்டுவரும் முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாசலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்வது

சாவகச்சேரிப் பகுதி சென். ஜோன் அம்புலன்ஸ் குழு அத்தியட்சகர் திரு. கோ. சுப்பிரமணியம் இப்பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்துவைத்தார் இப்பயிற்சி வகுப்பில் 50-க்கு மேற்பட்ட மரணவர்கள் பயிறசிபெறுகின்றனர்

இதன் அடுத்த பயிற்சி வகுப்பு இம்மாதம் 21-ந் திகதி ஆரம்பமாகும். [ச-வா]

## மரமுந்திரிகை கன்றுகள்

பண்டத்தரிப்பு, புதன் தரிசுநிலங்களிலும். வீட்டு வளவுகளிலும் நட்டி பயன் பெறக்கூடிய மரமுந்திரிகை கன்றுகள் பண்டத்தரிப்பிலுள்ள நாற்றுமேடையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும் இவற்றைபெற விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு வை பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (இ)

## 641 தமிழ்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரால் கைது செய்யப்பட்ட 641 பேரின் நிலைமை பற்றி இதுவரை தெரிவிக்கப்படவில்லை. இதற்கு முடிவு காண வேண்டும்.

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மககளின் விபரங்கள் அறிவிக்கப்படவேண்டும்.

கைதுசெய்யப்பட்டவர்களின் பெற்ருேர்கள் தங்கள் பிள்ளைகளைக் காணத் தவிக்கிருர்கள், கைது செய்யப்பட்டவர்களின் பட்டியலை உடன் வெளியிட வேண்டும்.

அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்படுபவர்களின் சடலங்களை அடக்கம்செய்வதற்கு அவர்களின் உறவினரிடம் ஒப்படைக்கவேண்டும். தீவிரவாதிகளாக இருந்தால் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்க வேண்டும். உரியவர் பெருவிட்டால் பிரஜைகள் குழு அச்சடலங்களைப் பொறுப்பேற்று உரிய முறையில அடக்கம் செய்யும் ஒருவரைக் கைது செய்தால் 3 நாட்களுக்குள் பெயர் விபரம் பிரஜைகள் குழுவுக்கோ அரச அதிபருக்கோ தெரிவிக்க வேண்டும்.

தனியார் வாகனங்களில் படையினர் செல்லும்பொழுது மரணமானல் அவர்களுககு நஷ்ட ஈடுவழங்கப் படுவது போல பொது மக்களுக்கும் நஷ்டஈடுவழங்கவேண்டும்.

கைதுசெய்யப்பட்ட பொது மக்கள் அரச, கூட்டுத்தாபன ஊழியர்களை முகாம்களில் மரியாதையீனமாக நடத்துவதை நிறுத்தவேண்டும்.'' [மா]


**யாழ். மத்திய கல்லூரி பெற்ருேர்களின் விசேட பொதுக் கூட்டம்**

17-09-86 (புதன்) காலை 10 மணிக்கு மேற்படி கூட்டம் பாடசாலையில் நடைபெறும். பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் நலன்கருதி சகல பெற்ருேர்களும் தவருது சமூகம் தரவும்.

எஸ். தவலிங்கம், செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

[C 4662]

**மிது வீடியோ மூவீசாரின் இன்றைய புதிய வெளியீடு**
அர்ஜுன் – வனிதா நடித்த
**என் சபதம்**
[தரமான பிரதி]
**மிது வீடியோ மூவீஸ்**
பிரதான வீதி, சித்தன்கேணி
(A 1281)


## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு

தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலையத்தின் கல்வி நிதிய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1-வது | பரிசு | இலக்கம்: | 3764 |
| 2-வது | ,, | ,, | 21·4 |
| 3-வது | ,, | ,, | 212 |
| 4-வது | ,, | ,, | 515 |

ஆறுதல் பரிசுகள்

| | | | |
|---|---|---|---|
| 1-வது | பரிசு | இலக்கம்: | 2192 |
| 2-வது | ,, | ,, | 306 |
| 3-வது | ,, | ,, | 46 |
| 4-வது | ,, | ,, | 2484 |
| 5-வது | ,, | ,, | 1420 |

பரிசில்களை அதிர்ஷ்டசாலிகள் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்

—நிர்வாகம்.

[C4664]

## சாவகச்சேரி மாவட்ட

# நீதிபதியின் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி வி. பி. சுந்தரலிங்கத்தின் இடமாற்றத்தை நிறுத்திவைக்குமாறு நீதி சேவை ஆணைக்குழுவையும், பிரதம நீதியரசரையும் கோரும் தீர்மானம் சாவகச்சேரி மாவட்ட சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி செ. பாலகிருஷ்ணன் தலைமையில் நடந்த விசேட கூட்டத்தில் இத் தீர்மானம் நிறைவேறியது.

அத்தீர்மானத்தில் மேலும் நீதிபதி வி பி. சுந்தரலிங்கம் மாற்றலாகி சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு வந்த பின் வழக்குகளை மிகத் துரிதமாக விசாரணை செய்து மக்களின் அன்டைப் பெற்றுள்ளதுடன் நிர்வாகம் செயலிழந்த போதிலும் வழக்கு சம்பந்தப்பட்டவர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாதென்ற காரணத்தினுல் சிரமங்கள் எதையும் பொருட்படுத்தாது செயலாற்றி வந்த நீதிபதியின் இடமாற்றத்தை நிறுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர் சட்டத்தரணி செ. பாலகிருஷ்ணன் இத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் "சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் ஏற்கனவே தீக்கிரையாக்கப்பட்டதனல் வழக்குப் பதிவேடுகள் யாழ். உயர் நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. நீதிபதி சுந்தரலிங்கம் இங்கு மாற்றலாகி வந்தபின் பதிவஏடுகளை யாழ் உயர் நீதிமன்றத்திலிருந்து திரும்பப் பெற்று வழக்கு விசாரணைகளை ஆரம்பித்தார். அது மட்டுமன்றி பல காலமாக விசாரணை செய்யப்படாமல் இருந்த வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது. இந் நீதிமன்றத்துக்கு வந்து குறுகிய காலத்தில் வழங்கப்பட்ட இந்த இடமாற்றத்தை நிறுத்தி வைக்குமாறு கோருகிறேம்" என்றுர். [இ-எ]

## நாளை பரிசளிப்பு விழா

[காங்கேசன்துறை நிருபர்]

மாவிட்டபுரம் வடக்கு அ. மி. த. க. பாடசாலை பெற்றுர் விழா, பரிசளிப்பு விழா, கலைவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் பாடசாலைத் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. மா. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் காங்கேசன்துறை கல்வி அதிகாரி திரு பொ.சிவஞானசுந்தரம், தெல்லிப்பழை ப. நோ. கூ. ச தலைவர் திரு சிவமகாராசா, சட்டத்தரணி வி எஸ் கணேசலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

திருமதி வேதலக்ஷ்மி கணேசலிங்கம் பரிசில்கள் வழங்குவார் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. (மா)

## விடுதலைகால பாசறை

பண்டத்தரிப்பு, திங்.

பண்டத்தரிப்பு - பெரியவிளான் பங்கைச் சேர்ந்த மறைக் கல்வி மாணவரின் விடுதலைக்காலப் பாசறை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இருதினங்கள் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக முன்னுள் தலைவர் திரு உ ந.தேவகடாட்சம் தலைமையில் நடைபெற்ற இந்தப் பாசறையில் 150 மாணவர்கள் பண்டத்தரிப்புப் பங்குத் தந்தை அருடதிரு கி. ஜெயக்குமார் அடிகளின் ஏற்பாட்டின் பேரில் பங்கு பற்றினர்கள். [இ]

## விளையாட்டுப் போட்டி

பளை திங்கள்

கிளிநொச்சி மாவட்டங்களுக்கான இளைஞர் சேவை மன்றத்தினுல் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி பளை மைதானத்தில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ் தர்மசீலன் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிக்குப் பளை உதவி அரசாங்க அதிபர் எஸ், கந்தசாமி, மகாவித்தியாலய அதிபர் அ.பொ.செல்லையா ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கினர்கள். [இ]

## விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம் செவ்.

கோகிலா மகேந்திரனின் இரு நூல் விமர்சன அரங்கு இளவாலை மெய்கண்டான் ம. வி யில் 20ம் திகதி சனிக்கிழமை மாலை நிகழும். இந் நிகழ்ச்சிக்கு அதிபர் சு.செல்லத்துரை தலைமைதாங்குவார்.

பலாலி ஆ ப. கல்லூரி விரிவுரையாளர் திரு ஆர்.எஸ் நடராசா பிரதம விருந்தினராகவும் புலவர் மா. பார்வதிநாதசிவம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

திரு ஜெகதீசன், செல்வி சு. சாந்தி திரு சோ பத்மநாதன், திரு, உமாமகேஸ்வரன், கலாநிதி சபா ஜெயராசா ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்துவர்.

கோகிலா மகேந்திரனின் பதிலுரையுடன் உ. சாந்திகுமாரனின் நன்றியுரையும் இடம்பெறும்.

## ஆய்வுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்

"கலாதி சுப்பிரமணிய ஐயர் மேற்கொண்ட ஆய்வு தமிழ்த்துறையில் சிக்கலான ஓர் ஆய்வாகும். ஆனுல் அவர் தமது இடைவிடாத முயற்சியினல் தமது ஆய்வைப் பூரணப்படுத்தி அதற்கான கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார், இது தமிழ்த்துறைககு கிடைத்த பெருமைலாகும் இவர் எனதுமாணவர் என்ற முறையில் இவரைப்பாராட்டுவது எனக்குப் பெருமையளிக்கிறது"

இவ்வாறு யாழ். கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியம் நல்லூர் இந்து விடுதியில் நடாத்திய அறிஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியின்போது. யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கலா நிதி சுப்பிரமணிய ஐயரைக் கௌரவித்து வாழ்த்துரை வழங்குகையில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்

'வரதர்' தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு யாழ். பல்கலைக்கழகத்தின் சகல துறைப்பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், மதப்பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

திரு ஐயா சச்சிதானந்தம், கலாநிதி சி பாலசுந்தரம், செங்கையாழியான், திருமதி கோகிலாமகேந்திரன், திரு இ ஜெயராஜ், பி நடராஜன், திககவயல் தர்மகுலசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர். (கை-வா)

## நியமனம்

பண்டத்தரிப்பு, செவ்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சங்கானை வடக்கு கிராம சேவை அலுவலராக மாதகலைச் சேர்ந்த திரு இ துரைராசா உளநாட்டு அலுவல்கள் அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கட்டிடவேலைகள் பூர்த்தி

வேலணை, திங்கள்.

புளியங்கூடல் சந்திக்கு அண்மையில் கட்டப்பட்டு வரும் பொதுச்சந்தைக்கான கட்டிடவேலைகள் யாவும் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது

இச்சந்தைக் கட்டிடங்களின் வேலைகள்யாவும் முடிவுற்றதும் பொதுமக்களின் பாவனைக்கென திறந்துவிடப்படவுள்ளது.

## மகோற்சவம்

சுன்னுகம், திங்கள்

ஊரெழு அருள்மிகு மீனுட்சி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 5ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இம்மாதம் 18ம் திகதி சப்பரமும், 19ம் திகதி ரதோற்சவமும், 20ம் திகதி தீர்த்தோற்சவமும், 22ம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

கம்பன் கலைக்கழக அமைப்பாளர் திரு. இ ஜெயராஜ் நிகழ்த்தும் 'பெரிய பராணப' தொடர் சொற்பொழிவு தினமும் மாலை 7 மணிக்கு மேற்படி தேவஸ்தானத்தில் இடம்பெற்றுவருகிறது. [இ]

## இசைவிழா இறுதிநாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் செவ்

யாழ். மாவட்ட கலாச்சாரப் பேரவையின் ஆதரவில் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றுவரும் ஐந்து நாள் இசைவிழாவின் இறுதி நாளான இன்று பிற்பகல் யாழ். மாநகரசபை ஆணையளர் திரு. சி வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமாகும் இசை நிகழ்ச்சிகளில் திரு, எஸ். குமரசாமி. திரு. பொன். சுந்தரலிங்கப ஆகியோரின் இசைக கச்சேரியும், செல்வி மாலினி ஸ்ரீனிவாசனின் வீணைக் கச்சரியும் இடம்பெறவுள்ளன. [வா]

## பொதுமக்கள் மகஜர்

கொழும்புத்துறை, திங்கள்

கரவெட்டி மேற்கு கரணவாய் தெற்கு ஊரெல்லை வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறும், இவ்வீதி திருத்தத்திற்கென 1987ம் ஆண்டு அபிவிருக்திநிதியில் முன்னுமை கொடுத்து நிதிஒதுக்கித் தருமாறுகோரும மகஜர் ஒன்று பொதுமக்களினுல் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கப்புதூ மணற்பாதி, அந்தணத்திடல், சோளங்கன், மண்டான் பகுதி மக்கள், நெல்லியடிக்குச் செல்வதற்கும், நவிண்டில், கலட்டி, மணற்பாதி விவசாயிகள் கிராய் முதலைக்குளி, அந்தணத்திடல், வயல்களுக்கு செல்வதற்கும் இவ்வீதியையே பயன்படுத்தி வருகின்றனர் என்றும் அம் மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [இ-வா]

## பம்பாய் வெங்காய உற்பத்தி:

# முன்மாதிரியான கிராமம்

## அராலி உரக்களஞ்சியதிறப்புவிழாவில் பாராட்டு

அராலி, திங்கள்

"இலங்கையில் பம்பாய் வெங்காய உற்பத்தியில் அராலி முன்மாதிரியாகத் திகழ்கிறது. இந்தக் கிராமத்தில் உரக்களஞ்சியத்தை திறந்துவைப்பதில நான் பெருமையடைகிறேன்" என்று என்று அராலியில் உரக்களஞ்சியத்தை திறந்துவைத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட கமநலசேவைஇலாகாசிரேஷ்ட உதவிஆணையாளர் திரு க, பரமலிங்கம் குறிப்பிட்டார்.

திரு சி, சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"நாங்கள் யாழ்ப்பாண பிரதேசத்திலிருந்து தென் பகுதிக்கு ஏற்றுமதிசெய்வதை முன்னிட்டு இங்குள்ள பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம், இளம், விவசாயிகள் கழகம் போன்றன அமைந்த இடத்தில் உரக்களஞ்சியம் திறந்துவைப்பது பொருத்தமானது.

"கிராமமட்டத்தில் நாரந்தனை, அளவெட்டி குப்பிளான் போன்ற இடங்களிலும் அராலியிலும் உரக்களஞ்சியம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. 50 அல்லது 100 உரக்களஞ்சியங்கள் கிராமமட்டத்தில் திறந்துவைத்தால் செயற்கையாக வரும் தடுப்பாடுகளை நீக்கலாம் விவசாயிகளுக்கு நாளாந்தம் ஏற்படும் பிரச்னைகளுக்கு இளம் விவசாயிகள் கழகம். பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கம் என்பன விவசாயம் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்கி இவ்விவசாயிகளை மேலும் ஊக்குவிக்கலாம்

எமது பிரதேசத்தில் உள்ள மரவள்ளி, இராசவள்ளி, கிழங்குவகையையும் உற்பத்தி செய்து, சேமித்துவைக்க வேண்டும். பணத்தை மட்டும் வைத்திருந்து எவ்வித பலனுமில்லை. போஷாக்கு நிறைந்த எமது பிரதேசத்து உணவுகளான குரக்கன். சாமி, பனம் பொருள்களையும் இலைக்றிவகைகளான குறிஞ்சா, மொசுமொசுக்கை போன்ற போஷாக்கு நிறைந்த உணவு உற்பத்திகளையும் நாம் மேற்கொள்ளவேண்டும்".

விழாவை வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து.வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். அவர் உரையாற்றும் போது "எங்கள் பகுதிககு நாங்கள் நினைக்கும் அளவிற்கு அபிவிருத்தி செய்ய முடியாமலிருக்கிறது. யாழ். மாவட்டத்தில் அராலி கிராமம் முன்மாதிரி கிராமாக மாற வேண்டும். அராலி கிராமம் பம்பாய் வெங்காயம் என்னு உற்பததியில் முன் மாதிரியாக திகழகிறது. இவ்வுரக்களஞ்சியம் மூலம் விவசாயிகள் நன்மையடைந்து மேன்மேலும் சிறந்து விளங்க வேண்டும்" என்றுர்.

அடுதது கச்சேரி பெரும்பாக உத்தியோகத்தா திரு நா. குழந்தைவேலு பேசுகையில் விவசாயிகளின் போக்குவரதது வீண் அலைச்சல் போன்ற சிரமங்களிலிருந்து மீட்பதற்கு விவசாயிகளுக்கு இவ்வுரக்களஞ்சியம் அவசியமானது" என்றுர்.

கொடிகாமம்

## நவீன சந்தைக்கு நிதி ஒதுக்கீடு

கொடிகாமம். திங்.

கொடிகாமம் நவீனசந்தை வேலைகளை பூர்த்திசெய்வதற்காக கச்சாய் அபிவிருத்திச் சபை அலுவலகத்தினுல் 13 லட்சரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நவீனசந்தை வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகிறது. [இ]

## பாராட்டு

பளை, திங்.

முழங்காவில் பிள்ளையார் கோயிலின்கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 15 நாள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது இவ்விழாவில் ஆத்மஜோதி முத்தையாவுக்குபொன்னுடை போர்த்தி அவர் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றும் மகத்தான சேவையை முழங்காவில் மகாவித்தியாலய அதிபர் பொன். தில்லைநாதன் பாராட்டிக் கௌரவித்தார். [இ]

## வர்த்தக சங்கம்

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தினைப் புனரமைப்புச் செய்து சிறந்தமுறையில் பணிபுரிய சாவகச்சேரி வர்த்தக சங்கம் அண்மையில் தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் இருக்கின்றசகலகைத்தொழில் வர்த்தக ஸ்தாபனங்கள் தம்மை இச்சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு செயலாளர் திரு விமலதாஸ் நவரத்தினம் கோரியுள்ளார். (க

## புதிய கட்டிடம்

வசாவிளான், திங்கள்

சுன்னுகம் ஐயனுர் சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டிடம் ஒன்று நிறுவபபடவுள்ளது

சுமார் 50 000 ரூபா செலவில் கட்டப்படவுள்ள இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை சுன்னுகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு சி குமரவேல் கடந்த திங்கட்கிழமையன்று வைபவரீதியாக நாட்டினுர்.

## 'தூய உள்ளத்துடன் வழிபாடு அவசியம்'

நெல்லியடி, திங்.

'அறம் தளர்ந்து அக்கிரமத்தின் கைமேயாங்கும் போது நீதியை மீண்டும் உலகில் நிலை நாட்ட எனது புனர் ஜன்மம் தோன்றும் என கீதையில் கண்ணன் கூறினுர். உலகமக்களின் நல்வாழ்வுக்கு கண்ணனின் அருள் அவசியம்.'

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமக்கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில நடைபெற்ற கிருஷ்ண ஜெயந்தி விழாவில உரையாற்றிய சுவாமி சித்ரூபானந்தா கூறினுர்.

## ஷெல் தாக்குதல் வீடுகள் சேதம்

பருத்தித்துறை திங்கள்

பருத்தித்துறைப் பகுதியிலும் சமீபித்த கிராமங்களிலும் தொடர்ந்து நடைபெற்றுவரும் மோட்டார் ஷெல் ஹெலிகொப்டர். பீரங்கித்தாக்குதல்களால் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. இப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி இடம்பெயர்ந்து வருகின்றனர்

அண்மையில் பருத்தித்துறை வல்லிபுரக் கோவில் பகுதியால் தாழப்பறந்த ஹெலிகாப்டர் ஒன்று அவ்வீதியால் சென்ற வான் ஒன்றைத் துரத்திச்சுட்டது.

இராணுவ முகாம் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் பல வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. [இ]

நூல் விமர்சனம்:

## யாழ். கல்லூரி விடயத் தொகுப்பு

**Jaffna College Miscellany 1985/Allen Abraham-Halley's Comet Number.**

''வான சோதிகளைக் கவனித்துப் படித்த பின்பும் ஒருவன் தெய்வ பயம் இல்லாதிருப்பானாயின் அவன் மதிமயக்க முள்ளவனாயிருத்தல் வேண்டும்''
— நெப்போலியன்

இன்று இலங்கை வந்திருக்கும் வத்திக்கான் (ரோம்) விஞ்ஞானி டாக்டர் ஜோர்ஸ் கோயின் [Coyn] இலங்கை மக்கள் வானவியலில் அதிக ஆர்வம் கொண்டிருக்கின்றனர் என்றும் அதனை ஒருபாடமாக மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்றும் கூறியிருக்கிறார். மதத்திற்கும் விஞ்ஞானத்துக்கும் என்றுமே பிணக்கிருந்ததில்லை; மதவாதிகள் சிலருக்கும் விஞ்ஞானிகள் சிலருக்கும் கருத்துவேறுபாடுகள் இருக்கலாம் என்ற கருத்தையும் டாக்டர் கோயின் தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயத்தில் நாம் அக்கறைகொள்ள உதவும் நூல் யாழ்ப்பாணக்கல்லூரியின் சென்ற வருட சஞ்சிகை Jaffna College Miscellany 1985. சுமார் 200 பக்கங்களைக் கொண்ட இவ்வரிய நூல், இலங்கையின் பிரபல வானசாஸ்திரியும், யாழ்ப்பாணக் கல்லூரி பேராசிரியருமாகத் திகழ்ந்த அலன் ஆபிரகாம் நினைவு மலராக மலர்ந்திருப்பது பாராட்டுக்குரியது.

அலன் ஆபிரகாம் அம்பலவாணர் என்ற பெயரைக் கொண்ட காரைநகர் மாணவன் வட்டுக்கோட்டைக் கல்லூரியின் கணிதப் பேராசானாகவும், சர்வதேச புகழ்பெற்ற வானசாஸ்திரியாகவும் வளர்ச்சிபெற்ற விரக்கதை பலகோணங்களிலும் இச்சஞ்சிகையில் ஆராயப்பட்டிருக்கிறது.

1911-ல் தோன்றிய ஹலி தூமகேது எந்நேரத்தில் முதன் முதலாக பூமிக்கணித்தாய்த் தோன்றும் என்ற விவாதத்தில், மேனாட்டு நிபுணர்களுடன் பங்குபற்றி, தமமுடைய கணிப்பே சரியென்பதை நிலைநாட்டி, FRAS பட்டம்பெற்றார்.

இப்பெரியாரின் வரலாற்றையும் பெருமை மிக்க சாதனைகளையும் உள்ளடக்கியசஞ்சிகை என்பதால் இது ஒரு அரிய நூலென்பது புலனாகின்றது.

இன்றைய இலங்கை விஞ்ஞானிகளுக்கு பேராசிரியர் அலன் ஆபிரகாம் நன்கறியப்பட்ட பெயரெனத் தோன்றவில்லை. சடந்த வருடம் மீண்டும் தோன்றிய ஹலி தூமகேது மறைந்திருந்த. பறந்திருந்த இப்பேரறிஞரை இந்த நாடு அறிய உதவியது

சஞ்சிகையில் பேராசிரியர் எழுதிய கட்டுரைகளும் அவரைப்பற்றி எழுதப்பட்ட கட்டுரைகளும் அக்காலத்திலேயே தமிழில் புலமையும் (பேராசிரியர் ஒருபெருங் கவிஞர்), கணிதத்தில் திறமையும் நிறைந்த பேரறிஞர்கள் இயற்கையுடன் இணைந்த வாழ்வில் பூமியை மட்டுமல்ல, வானமண்டலங்களையும் தங்கள் அகக்கண்ணால் அவதானித்து அற்புத சாதனைகள் நிகழ்த்தியிருப்பதை நிரூபிக்கின்றன.

''வானத்திலே 365 பக்கங்களுள்ளதும், ஒருபோதும் பழலமப்பட்டுக்கிழிந்து போகாததுமாகிய ஓர் அலங்காரமான புத்தகம் எல்லோருக்கும் முன்பாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. அதைக் காண்பதற்குக் கண்ணும், கிரகிப்பதற்கு மனமும் எவருக்கும் தன்சொந்தமொழியில் வாசித்துப் படித்துச் சிருஷ்டிப்பின் அதிசயஉணர்வையும் இன்பத்தையுமடையலாம்'' என 'வ ஞுதிசயங்கள்' என்ற தலைப்பில் அவர் எழுதிய வசனம் இது.

இத்தகைய ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல எளிதில் விளங்கக் கூடியவரையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் கல்லூரி சஞ்சிகையில் அக்காலத்தில் அடிக்கடி எழுதியிருப்பதாக, கல்லூரி அதிபர் திரு. கதிர்காமர் தமது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார். இவற்றையெல்லாம் பக்குவப்படுத்தி வைத்திருப்பது கல்லூரியின் தனித்துவ மரபு.

கீழைத்தேசங்களில் குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சுமார் 50 வருடங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவங்கள் வரலாற்றுக்கவசியமானாலும் அவற்றைப் பற்றிய உண்மை விபரங்களை ஆவணங்களிலோ, நூல்களிலோ பாதுகாத்துவைக்கும் மரபு பொதுவாக காணப்படுவதில்லை. இந்த வகையில் யாழ்ப்பாணக் கல்லூரி சஞ்சிகை (Jaffna College Miscellany) ஆய்வாளர்களுக்கு ஒரு தங்கச் சுரங்கமெனபது மிகையாகாது. அதிபர் கதிர்காமரின் கட்டுரை பேராசியர் அலன் ஆபிரகாம் பற்றிய வாழ்க்கை, ஆசிரிய விஞ்ஞான சாதனைகள் அனைத்தையும் ஆவணரீதியில் விளக்குகிறது.

இலைமறைகாய்போல் அடக்கமே அணிகலனாக வாழ்ந்த பெரியார் 'மூளாத்தீப் போல் உள்ளே கனற்றி' ருந்தமை பற்றி பேராசிரியர் எலியேசர் அவுஸ்திரேலியாவிலிருந்து காப்பியபாணியில் நினைவு கூருகின்றார். தாம் மாணவராகவிருந்த காலத்திலேயே அலன் உபாத்தியாயரின் வானளாவிய கணித வானசாஸ்திர திறமைகள் தமக்கு விஞ்ஞானத்தில் ஆர்வம் தூண்டியதெனக் கூறுகிறார். ஆனால் நாட்டிலேயோ சமூகத்திலேயோ அவருக்குரித்தான கீர்த்தி பிரபலமடையவில்லை.

எக்காலத்திலும் வாழும் உத்தம புருஷர்கள் அக்காலத்தில் எதிர்ப்பை, பொறுமையைச் சமாளிக்கும் வல்லவர்களாகக் காணப்படுகின்றனர். பெருமரங்களைத்தறித்து விட்டால் வடலிகள் தெளிவாய்த் தோன்றும் என்ற கருதுடையவர்கள் என்றும் உளர் இது தவறென்பதை காலம் காட்டுகிறது குறிப்பிட்டஆண்டில் திரும்பவும் தோன்றிய ஹலி வால்வெள்ளி ஆபிரகாம் பண்டிதரின் பெருமைக்கு புத்துயிர் அளிக்கிறது இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் இப்பெரியாரின் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஒருநூல் வடிவில் வெளியிடவேண்டுமென்ற கருத்தை கல்லூரி சஞ்சிகை சொல்லாமற் சொல்கிறது. சாதனையிலும் பார்க்கசாதகன் சிறந்திருப்பதை காரைநகர் கடற்கரையில் இன்றும் அடர்ந்திருக்கும் பனந்தோப்பு பறைசாற்றுகின்றது. இயற்கையாக இலகுவில் உரம்பெற வளரும் இவ்வான்-பயிர் நீண்ட, நிமிர்ந்த தலையால் வண்ணை எட்ட முயல்கிறது. அதன் பிரதிபிம்பமே பேராசான் அலன் ஆபிரகாம் என்பதை சஞ்சிகைக் கட்டுரைகள் நன்கு விளக்குகின்றன. குறிப்பாக திரு. எஸ் ஜெபநேசன் தமிழில் எழுதிய ''கிறிஸ்தவக் கவிஞர் அலன்ஆபிரகாம்'' என்ற கட்டுரை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

இதுபோன்ற தரமான கட்டுரைகளும், ஒரு பல்கலைக்கழக பாரம்பரியத்தை வளர்த்து வந்த கல்லூரியின் பல திறப்பட்ட (தொழில்நுட்ப நிறுவனம், விவசாயபயிற்சிநிலையம், கிறிஸ்தவ ஆய்வு நிலையம்) துறைகளின் அறிக்கைகள் தேசிய, சர்வதேச விவகாரங்கள் கொண்ட அரிய நூல் கல்லூரிச்சஞ்சிகை. சாதாரண கல்லூரிகள் இக்காலத்தில் இத்தகைய வருடாந்த வெளியீட்டை கனவிலும் நினைக்க முடியாது.

குறிப்பாக Dr. Robert Porter எழுதிய கட்டுரை இன்றைய இனவெறி நிறைந்த ஆட்சியில் சமுதாயத்திற்கு ஏற்படும் அனர்த்தங்களை மிகச் சுவையாகவும் விகடமாகவும் தொட்டுக்காட்டுகிறது

அமரர் ஐ பி துரைரத்தினத்தின் வாழ்க்கை நயம் எழுதிய முன்னைநாள் பிஷப் குலேந்திரன் 'கடமை' என்னவென்பதுபற்றி புதுமணம் கமழும் கருத்தை இலங்குநூலுக்குரிய பாணியில் குறிபபிடுகிறார்

கல்லூரி பரிசளிப்பு விழா கல்லூரிக்கேற்ற பெருமைமிக்கவைபவமாதலால் பிரதம அதிதியின் பேருரை என்றும் சிறப்புடையது பேராசிரியர் சிவத்தம்பியின் பேச்சு ஆங்கிலத்தில் மட்டுமல்ல தமிழிலும் வெளியிடப்பட வேண்டுமென்று கோருவது நியாயமாகும். அதுமட்டுமல்ல சிந்தனையைத் தூண்டும் படைப்புக்கள் இக்கால மாணவ உலகுக்கும், சமூகத்துக்கும் பயன் தரும்வகையில் தமிழுக்குரிய இடம் சஞ்சிகையில் கொடுக்கப்பட வேண்டும், 'அலன் சட்டம்பியார' எவ்வாறு உலகப் புகழ்பெற்ற ஆபிரகாம் அம்பலவாணராக வளர்ச்சியடைந்தார்என்றகதையை திருது விசுவநாதன் நயம்பட உரைக்கிறார், தமிழ் வாசகர்களுக்கு இதனைப் படிக்க வாய்பபில்லையே,

'தேசியம்' என்ற உணர்வை வளர்த்துவந்த கல்லூரி இதனைக் கருத்திற் கொள்வது நலம்.

வீ. எஸ். நமசிவாயம்

தென்கொரிய

# சர்வதேச விமானநிலையத்தில் குண்டு வெடிப்பு: ஐவர் பலி

சியோல் செப் 15

தென்கொரியாவில் சியோல் கிங்பூர் சர்வதேச விமான நிலையத்தில் பிரயாணிகள் தங்கும் அறைக்கு வெளியே இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஐந்து பேர் பலியானார்கள். இருபதுக்கும் மேற்பட்டோர் பலத்த காயமுற்றனர்.

இச் சம்பவத்தின் போது விமான நிலையத்தில் தங்கியிருந்த கொரியா விமான நிலைய உயரதிகாரி ஒருவரும் பலியானதாகத் தெரியவருகின்றது.

இம்மாதம் 20ம் திகதிசியோவில் ஆரம்பமாகும் பத்தாவது ஆசிய விளையாட்டு விழாவிற்காக பல நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், விளையாட்டுத் துறை அதிகாரிகளும் சியோலிற்கு விமானங்கள் மூலம் வந்து கொண்டிருக்கும் இவ்வேளையிலேயே குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நாட்டின் பல முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பொலிஸ் படையினர் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். [சி]

## அன்பாலும் பண்பாலும் உயர்ந்தவர்



அன்பாலும். பண்பாலும் உயர்வுபெற்று காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் மனதில் இடம்பெற்ற கனகசிங்கம் கலாரஞ்சன் திடீரென மறைந்தமை சகல தொழிலாளர்களையும் கவலைக்கடலில் ஆழ்த்தியுள்ளது

சிமெந்து தொழிற்சாலை தொலைபேசிப்பகுதியில்கடமை புரியும் கனகசிங்கத்தின் 4வது புதல்வனான இவர் 1966ம் ஆண்டு பிறந்து காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயின்றபின் மேற்படிதொழிற்சாலையில் தொழில் பார்த்துவந்தார்.

அங்கு தொழில் பார்த்ததைவிட அங்கு கடமைபுரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் யாவரின் மனத்திலும் இடப்பெற்று அமைதியாக வாழ்ந்துவந்தவர்.

தம் 20வதுவயதில் திடீரென ஏற்பட்ட மூளைக்காய்ச்சல் நோயால்பீடிக் ப்பட்டுமறைந்தார். இவர் சிறந்த விளையாட்டு வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது:

— ஓர் அன்பர்

## 'கிரிக்கெட்' போட்டி ஒளிபரப்பிற்கு 20 கோடி ரூபா

புதுடில்லி செப் 15

இந்தியாவும் பாகிஸ்தானும் அடுத்த ஆண்டு நடாத்தவுள்ள உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகளை ஒளி பரப்புவதற்காக 'தூரதர்ஷன்' 20 கோடி ரூபா ஒதுக்கியுளளது

அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் ஆரம்பமாகும் அறுபது ஓவர்கள் கொண்ட இப் போடடிகள் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் நடைபெறவுள்ளது. [சி]

## ஐ. நா. வின் 41 வது கூட்டம் இன்று ஆரம்பம்

நியூயோர்க் செப் 15

ஐக்கிய நாடுகள் சபையின் 41 வது ஆண்டுக் கூட்டத் தொடர் இன்று நியூயோர்க்கில் ஆரம்பமாகின்றது.

இந்த மூன்று மாத கூட்டத் தொடரில் 159 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளார்கள்.

தென் ஆபிரிக்க நிலைமை உட்பட உலகின சுமார் 150 பிரச்னைகள் குறித்து இங்கு அவர்கள் ஆலோசிப்பார்கள். (சி)

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—31(16-9-1986)
கிழமை—செவ்வாய்
திதி திரயோதசி
நக்ஷத்திரம்—அவிட்டம்

மேடம்:- இலச்சியப்பாதையில் இன்று முன்நிற்பீர்கள். பெரியோரின் ஆதரவும் கிடைக்கும். தொழில் மகிழ்ச்சியுண்டு.

இடபம்: உள்ளத்தில் உவகை துள்ளும் தொழில் முன்னேற்றமுண்டு. முத்தான சந்திப்புமுண்டு சுபதினம்.

மிதுனம்:- நிதியில் முடக்கம் ஏற்படும். சிலர் வீண் பழி கேட்கவும் நேரிடும். மனவிரக்தியும் ஏற்படலாம்.

கடகம்:- கல்வி நிலை முன்னேற்றமுண்டு. குடும்ப வாழ்வும் மலரும். இன்று சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள்

சிங்கம்:- முன்னேற்றப்பாதையில் தடைகள் ஏற்படும். பணத்துடன் பழகுபவர் கவனம் வேண்டும். வித்துக் கிடமுண்டு. நிதானம் அவசியம்

கன்னி:- இதயத்தில் ஏக்கம் இன்று தணியும். நண்பர் மூலம் நன்மை கிட்டும். பிதாவழிப் பெருமையுமுண்டு

துலாம்:- அன்புக்கரங்கள் இணைக்கும் அதிர்ஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். குடும்பத்திலும் குதூகலம் தென்படும்.

விருச்சிகம்:- பிறர் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் லாபகரமான தொழிலில் ஈடுபடுவீர்கள். இதயததிலும் இன்பம் பொங்கும்.

தனுசு:- இதயச்சுமை தோன்றும். பணத்துடன் பழகுபவர் அவதானம் வேண்டும். தானிய விருத்திக்குமிடமுண்டு.

மகரம்:- பயிர்ச்செய்கையில் பாதிப்பு தென்படும், குறை கேட்க நேரிடும். சிந்தித்துச் செயலாற்றவும்.

கும்பம்:- வெற்றி உமது அருகில் விரைந்து வரும். காதலர்கள் வாழ்விலும் நன்மையான சம்பவம் கிட்டும். தொழில் விருத்தியுமுண்டு.

மீனம்:- பகைகள் தோன்றும் பணத்துடன் பழகுபவர் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். கொடுத்த வாக்கைக்காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள்.

திருமலை
வே ரவீந்திரன்


## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு கிழமையும் கொழும்பிலிருந்து நேரடியாகப் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ மத்திய கிழக்கு நாடுகள் ★

வருமான ஒழுங்குகளுடன் அழைத்துச் செல்லப்படும்.

அத்துடன்

பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றிங் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

UNIVERSAL AGENCIES
யூனிவேர்சல் ஏஜென்ஸி
125 [455] ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில், பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

[A 1324]

# மின் தடை
## யாழ். நகரில்
## இலங்கை மின்சாரசபையின் முக்கிய அறிவித்தல்

1986-09-17 ம் திகதி புதன்கிழமை போயா தினத்தன்று அவசர திருத்தவேலை காரணமாக யாழ். நகருக்கு (Jaffna Town only) மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படு வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதே அலுவலகம்,
இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்,
(A 1280)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற விநாயகமூர்த்தி பொன்னுத்துரையின் மரண சாதனமில்லாச் சொத்து விடயமாக:

-இறந்தவர்.

விநாயகமூர்த்தி பொன்துரை கைம்பெண் இராஜேஸ்வரி, ஊறணி, வல்வெட்டித்துறை.

-மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 1247 /T

எதிராக

1. பொன்னுத்துரை தியாணமூர்த்தி
2. பொன்னுத்துரைமகள் பவானிதேவி
3. பொன்னுத்துரை மாணிக்கவாசகர்
4. பொன்னுத்துரை சதாசிவம், யாவரும் ஊறணி வல்வெட்டித் துறை.

(3ம், 4ம், பராயமற்றவர்கள்)
-எதிர்மனுதார்கள்.

மேலே பெயர்கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ம் திகதி இந்நீதிமன்றில் காலை 9-30 மணிக்கு தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி,

சண்முகம் நடராசா,
பதிவாளர்.

வரைவு:
க நடேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 4622)

## கோரிக்கை

பண்டத்தரிப்பு, திங்கள் வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்துச்சாலைபொறுப்பதிகாரி டாக்டர் எஸ். மகாலிங்கம் மொனராகலை மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதை ரத்து செய்யுமாறும், அவரது சிறந்த சேவை இப்பகுதிமக்களுக்கு தொடர்ந்து கிடைக்க ஆவன செய்யுமாறும் இப்பகுதியிலுள்ள பொது நல அமைப்புகள் சுகாதார திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துளளன. (இ)

## நன்மதிப்பு பெற்றவர்



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை இருப்பிடமாகவும் கொண்ட திரு வி. நவரத்தினம் தமது ஆரம்பக் கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், உயர்தர கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பெற்று இலங்கை சர்வகலாசாலை புகுந்து கணிதத் துறையில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினர் பின்னர் புள்ளிவிபரவியல் திணைக்களத்தில் உதவி இயக்குநராகப் பதவி ஏற்றுச் சில ஆண்டுகள் கடமையாற்றித் தமது ஐம்பதாவது வயதில் ஒய்வுபெற்ருா.

தொடர்ந்து 8 ஆண்டுகள் வரை லண்டனிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் கல்வித் துறை இயக்குநராகப் பதவி வகித்து வந்தார். கொழும்பு சாவகலாசாலை, வித்தியாலங்கார சர்வகலாசாலை ஆகிய இடங்களில் பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றினர். இவர் தமது சேவைக் காலத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற்றதோடு சகாக்களினதும், மாணவர்களினதும் நன் மதிப்பைப் பெற்றூர்.

கொழும்பு சி.எஸ் ஐ தேவாலய அங்கத்தவராகவிருந்து அச்சபையின் வளர்ச்சிக்கு அரும் பெரும் சேவையாற்றினர் சபையின் செயலாளராகவும், பொருளாளராகவும் ஆதீனப் பிரதிஸ்தராகவும் பல தடவைகள் பதவி வகித்து அச்சபையின் புதிய ஆலயம் உருவாகுவதற்கு உறுதுணையாய நின்றூர். இவரின் சேவை நலம் பாராட்டி ஆதீனம் தமது கருமகர்த்தாக்கள் சபைக்கு இவரைத் தெரிவு செய்தது.

இவர் இவ்வருடம் பெப்ரவரி மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம் சர்வகலாசாலையின் கணித பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் போது கடந்த ஐந்தாம் திகதியன்று மறுமை எய்தினர்.

சேவையிலிருக்கும் போது புலமைப் பரிசுபெற்று 2 ஆண்டுகள் கனடாவில் உயர் கல்வி பெறும் போது ரொறண்டோ சர்வகலாசாலை முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர்.

ஏ. பி. குணரத்தினம்

## ஈச்சமோட்டை வி. க.
## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் செவ். ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத்தினுல், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் நாளை நடைபெறவுள்ளது.

மேற்படி கழக மைதானத்தில் நடைபெறவுள்ள பரிசளிப்பு வைபவத்துக்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றூர்.

பரிசளிப்பு வைபவத்துக்கு முன்பு, ஆண்கள் பங்குபற்றும் செற்அப்'போட்டியும், பெண்கள் பங்குபற்றும் போட்யும், இறுதியாக சாம்பியன் கோஷ்டியான அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தெரிவுக் கோஷ்டி மோதும்.

இடபோட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகத் தலைவர் கப்ரின் டி. ஏ. எம் தணசிங்கம் சிறப்பாகச் செய்துள்ளார். [வி]

## இலங்கையில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களை அளித்தோ வருகின்றது. உதாரணம்: பிதா மேரிபஸ்ரியனும், தோ மிராண்டாவும், 'இந்தியா சென்றிருக்கலாம்' என ராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இன்னெரு சந்தர்ப்பத்தில் "காணுமல் போன சம்பவங்களை விசாரித்துவரும் பிரஜைகள் குழுவொன்றன் முக்கியத்தரில் ஒருவரான போல் நல்லநாயகத்தை அரசாங்கம் கைது செய்தது.

### மரண விசாரணை நடைமுறைகளில் கட்டுப்பாடுகள்

ஜுலை 79 இலும், பின்னர் 83 ஜுன்-84 ஜுன் இடையில் அமுலிலிருந்த அவசரகால சட்டவிதி 15 A. சடலங்களை மரண விசாரணையோ அல்லது வேறு நடைமுறைகளோ இன்றி, யாருடைய சமூகமுமின்றி கழித்து விட உதவியது.

பின்னர் இடைவிடாத புகார்களையடுத்து இச்சட்டவிதி வாபஸ் பெறப்பட்டு புதிய அவசரகால சட்டவிதி அமுலுக்கு வந்தது. ஆயினும் இச்சட்டவிதியும், இயறகைக்கு மாருக நிகழ்ந்த மரணங்களின் காரணங்களை கண்டு பிடிக்கவல்ல சாதாரண மரண விசாரணை நடைமுறைகளை சக்தியற்றதாக்கியது.

### ஒரு பார்வையில்

83 ஜுன் 14 முதல் 83 டிசம்பர் வரை காணுமற் போனேர் எண்ணிக்கை-4.

84 ஜன 1-84 டிச. 31 வரை 138.

85 ஜன 1 — 85 டிச 31 வரை 125.

86 ஜன — 86 ஏப் 28 — 5.

'காணுமல போன' 272 பேரின் ஒருவர் சிங்களவர், ஒருவர் பெண், ஒருவர் மறுமன் கத்தோலிக்க மதகுரு, ஏனையோரில் விவசாயிகள், மாணவர்கள், கடற்ருெழிலாளர் பணியாளர்கள், அரச ஊழியர்......

### காணுமற்போனேர் மாவட்ட ரீதியில்

வவனியாவில் 137 பேர், மட்டக்களப்பில் 49 பேர், அம்பாவையில் 45 பேர், மன்னுரில் 15 பேர், யாழ்ப்பாணத்தில் 13 பேர், திருமலையில் 12 பேர்

(நாளை தொடரும்...)

# மன்னுர் செய்திகள்

### பார்வையிட்டனர்

அண்மையில் மன்னுர் மாவட்டத்தில் ஏற்பட்ட அசபாவிதத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளையும் அரச கட்டிடங்களையும் பார்வையிடுவதற்காக மன்னுர் அரசாங்க அதிபர் திரு எம். எம். மக்பூல் தலைமையில் மாவட்ட அமைச்சரின் செயலாளர் ஜனுப் ரசிட், மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. செபநாயகம், உதவி அரசாங்கஅதிபர் திரு. வி. சண்முகநாதன், நகர கிராமசேவை அலுவலர் திரு. அ. மரியதாஸ் பீரிஸ் ஆகியோர் சென்று சேதங்களை மதிபிட்டு உடன் நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### பதில் நீதிபதி

மன்னுர் மாவட்ட நீதிபதி இடமாற்றலாகிச் சென்றதன் காரணமாக பதில் நீதிபதியாக சிரேட்ட சட்டத்தரணி எம் சீமான்பிள்ளை கடமையேற் பணிபுரிகின்றூர்.

### ஐஸ் உற்பத்தி

நீண்டகாலங்களுக்கு பின்னர் பேசாலை கடற்தொழில் கூட்டுத்தாபனத்தினரால் ஐஸ் உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இதனல் கடற்ருெழிலாளர்களால் பிடிக்கப்படும் மீன்களுக்கு உடனுக்குடன் ஐஸ் பாடடுபழுதுபடாமல் கொழும்புக்கு அனுப்ப வசதியாக உள்ளது.

### திருத்த வேலைகள் ஆரம்பம்

அண்மையில் மன்னுரில் ஏற்பட்ட அசம்பாவிதத்தால் பாதிப்படைந்த தொலைபேசி இணைப்புக்கள், மின்சார இணைப்புக்கள்போன்றவற்றை திருத்தம் செய்யும் வேலையில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றூர்கள். தற்சமயம் ஒரளவியகு மன்னுரிலிருந்து வெளிமாவட்டங்களுடன் தொலைடேசி மூலம் தொடர்பு கொள்ளக்கூடியதாக உள்ளது.

### கடற்ருெழிலாளர் நிவாரணம்

கடல்வலயத்தால் பாதிக்கப்பட்ட மன்னுர் மாவட்டத்திலுளள கடற்ருெழிலாளர் முதல்தடவையாக வழங்கப்பட்ட மீனவ விசேட உணவு முத்திரைகள் முடிவுபெற்றமையால் இரண்டாவது தடவையாக அதே குடும்பங்களுக்கு மீனவ முத்திரைகள் வழங்கப்பட உள்ளன. ஆனுல் வறுமை நிவாரணத்திட்டத்தின்கீழ் தகுதிபெற்றவர்கள் இந்த மீனவ நிவாரணம்பெறுல் அவர்கள் மீனவ நிவாரணம் அரைவாசிப் பகுதியே பெறுவார்கள். நாற்பது ரூபாவுக்குப்பதிலாக இதபதுரூபா மாத்திரம் ஒருவருக்குக் கிடைக்கும். இதற்கான நடவடிக்கைகளை மன்னுர் அரச அதிபர் திரு. எம். எம். மக்பூலின் பணிப்புரையின் பிரகாரம் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு, அ. அருந்தவச்செல்வம் மேற்கொண்டுவருகின்றூர். (இ)

## கலை இலக்கிய ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், செவ் தெல்லிப்பழை கலை இலக்கியக்களம் நாளை 17-ம் திகதி புதன்கிழமை தனது முதலாவது ஒன்றுகூடல் நிகழச்சியை நடாத்துகின்றது.

தெல்.யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சி திரு. சோ. செ. சிதம்பரநாதனின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

இசையும் நானும் என்பது பற்றி திரு. சிதம்பரநாதனும், பெண்நிலை வாதமும் இலக்கியமும் என்பது பற்றி திருமதி மௌ சித்திரலேகாவும் இன்றைய நாடக அரங்கு என்பது பற்றி திரு. 'குழந்தை' எஸ். சண்முகலிங்கமும் ஒன்றுகூடற் கருத்து வழங்குவர். (ப)


## அறிவித்தல்

St. Peter's Nursery வகுப்புகள் 18-09-86ல் இரண்டாம் குறுக்குத்தெருவில் Christ Church மண்டபத்தில் ஆரம்பமாகும்.

(C-4656) மேற்பார்வையாளர்.

யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்
ஆண்டு - 7 (தரம் - 6) 1987
## பிரவேசப் பரீட்சை

விண்ணப்ப முடிவுத் திகதி: 05-10-86.
பரீட்சைத் திகதி: 08-11-86.
பரீட்சைக் கட்டணம்: 5/- ரூபா.

ஆண, பெண் விடுதிவசதி உண்டு.

[C-4653] அதிபர்.

## A/L 87 DAY CLASS
பிரிவு - II

ஆரம்பம்:- 19-09-86 வெள்ளிகாலை 8-00 மணி.
[எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்]
விபரங்கட்கு:-

New Master Institute,
B M. C. LANE, JAFFNA.

குறிப்பு:- பிரிவு: - I க்குரிய அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுளளன. [A-1331]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

செவ்வாய்க்கிழமை 16-9-86

# "அந்தந்த அலுவலகங்களிலேயே ஒய்வூதியம் வழங்கப்படும்"

## மாநாட்டில் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்

"ஒய்வூதியக் கொடுப்பனவுகள் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களிலேயே கொடுக்கப்படவேண்டும். கொடுப்பனவுகள் அலுவலகத்தில் சேரும் பணத்திலோ அல்லது ஒய்வூதியம் பெறுவோர் விரும்பின் காசுக்கட்டளையாகவோ கொடுக்கப்படவேண்டும்."

அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்க யாழ்ப்பாணக்கிளை ஒய்வூதியக் கொடுப்பனவு சம்பந்தமாக மாகாண அஞ்சல் அத்தியட்சகர் பிரதேச அத்தியட்சகர் ஆகியோரை சந்தித்து மாநாடு ஒன்றினை நடத்தியது. அம் மாநாட்டின்போதே சங்கத் தல்வைக்கப்பட்ட மேற்படி தீர்மானம்ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

"குறிப்பிட்டகால எல்லைக்குள் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாத ஒய்வூதியப் பத்திரங்களை வழக்கப்படி கச்சேரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்" என்ற தீர்மானமும் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் எக்காரணம் கொண்டும் ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்காக தங்கள் தங்கள் அலுவலகத்தைத் தவிர்ந்த வேறு இடங்களுக்கு செல்வதில்லை என்ற முடிவும் அங்கு எடுக்கப்பட்டது. (ரா)

## ராணுவத்தினரால் தகர்ப்பு

ஒட்டுசுட்டான், திங்கள்

ஒட்டுசுட்டான் இராணுவ முகாமிற்கு முன்பாக உள்ள நீர்ப்பாசன அலுவலகத்திற்குச் சொந்தமான உத்தியோகத்தர் விடுதிக் கட்டிடம் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டுள்ளது.

இக் கட்டிடம் உடைக்கும் பொழுது நீர்ப்பாசனப் பொறியியலாளர் கடமையில் இருந்தாரென்றும் அவருக்கு தெரிவிக்காமலே உடைத்து அக் கட்டிடத்தில் உள்ள மரங்கள் அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகள் என்பனவற்றை எடுத்துச் சென்றுள்ளனர் என்றும்கூறப்படுகிறது.

## ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தை 22ல் திறக்கமுடிவு

ஒட்டுசுட்டான், திங்கள்

ஒட்டுசுட்டானில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக கடந்த இரு வாரங்களாக மூடப்பட்டிருக்கும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தை மீண்டும் இம் மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை திறக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இ மாதம் 5ம் திகதி ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து இங்கு பயிலும் சுமார் 600 மாணவர்களும் 23 ஆசிரியர்களும் கடந்த இரு வாரங்களாக வித்தியாலயத்திற்கு வரவில்லை.

அச்சம் காரணமாக ஆசிரியர்கள் தங்குமனையில் தங்கவில்லை, அனேக ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் சென்று விட்டார்கள்.

பாடசாலையை மீண்டும் 22ம் திகதி திறப்பதற்கு அதிபர் திரு. தா, சிவசம்பு நடவடிக்கை எடுத்துள்ளார். இத்தினத்தில் ஆசிரியர்களைக் கடமைக்கு வருமாறு வட்டாரக் கல்வியதிகாரி திரு. மு. சிவானந்தமும் அதிபரும் கூட்டாகப் பணித்துள்ளனர். பாடசாலைக்கு பிள்ளைகளை ஒழுங்காகவும் பாதுகாப்பாகவும் அனுப்பி வைக்குமாறும் அதிபர் பெற்றோர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் [இ]

## திருமலை அகதிகளுக்கு உணவு முத்திரை வழங்கப்படுய்?

யாழ்ப்பாணம், செவ்

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மக்களுக்கு உணவுமுத்திரைவழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இடம்பெயர்ந்து வந்துள்ள திருமலை அகதிகளுக்கு தற்சமயம் நிவாரண உதவிகளை அரசாங்கம் வழங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே இவர்களுக்கு உணவுமுத்திரைகளும் வழங்கப்படுவது சாத்தியமில்லை என்பதால் அரசாங்கம் உணவுமுத்திரைகளை இவர்களுக்கு வழங்கவில்லை.

உணவு முத்திரைகளைப் பெறுவதற்காக இம்மக்கள் முதலாவது பத்திரத்தை நிரப்பி அனுப்பியிருந்த போதிலும் 'பி' பத்திரம் இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இம்மக்களுக்கு விநியோகிப்பதற்கென உணவுமுத்திரைகளோ, 'பி' பத்திரங்களோ யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்திருக்கவில்லை.

இம் மக்களும் நிவாரண நிதியுதவியை நிறுத்தி உணவு முத்திரையை வழங்கும் படி அதிகாரிகளிடம் விண்ணப்பித்துள்ளனராம். (ச)

## ஊசிமருந்து அன்பளிப்பு

வல்வெட்டித்துறை, திங்

வடமராட்சி தனியார் பேருந்து சேவை சங்கத்தினர் வல்வை அரசினர் வைத்தியசாலையில் நிலவும் அத்தியாவசிய மருந்துத் தட்டுப்பாட்டையும் நீக்கும் பொருட்டு ஆயிரத்துஇருநூறுரூபா பெறுமதியான ஊசி மருந்து வகைகள் முதலியனவற்றைக் கொள்வனவுசெய்து வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் செல்வி பத்மலோசினியிடம் கையளித்தனர்.

# யாழ். ரயில் நிலைய மேர்கியூரிபல்புகள் கொள்ளை!

## சிலிப்பர் கட்டைகளும் மறைவு

யாழ்ப்பாணம், செவ்

யாழ். ரயில் நிலையத்தில் நேற்று நண்பகல் இனந் தெரியாதவர்களினால் ஐந்து மேர்க்குறி பல்புகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வான் ஒன்றில் வந்த இனந் தெரியாதவர்கள் ரயில் நிலைமுகப்பில் பொருத்தப்பட்டிருந்த அதிசக்திவாய்ந்த 5 மேர்குறிபல்புகளை எடுத்துச்சென்றதாக ரயில் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னரும் யாழ் ரயில் நிலையத்தில் பாரம் தூக்கியந்திரபகுதி ஆணிகள், நிறுவையந்திரங்கள், கதவு, யன்னல் குமுளிகள் மற்றும் பலபொருட்கள் பல தடவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் அரியாலைக்கும் நாவற்குழிக்குமிடையில் சுமார் 30 புதிய சிலிப்பர்கட்டைகள் ரயில் பாதையிலிருந்து இனந் தெரியாவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கிளிநொச்சி வங்கிகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்ற கோரிக்கை

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் வங்கிகள் மூடப்பட்டுள்ளதை தொடர்ந்து பாதிக்கப்பட்ட வங்கி வடிக்கையளர்களின் கூட்டம் கிளிநொச்சி அத்தியாவசியக்குழுவின் ஏற்பாட்டின் பேரில் நேற்று நடைபெற்றபோது வங்கிகளை கிளிநொச்சியிலிருந்து பாதுகாப்பான இடத்திற்கு மாற்றுமாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

கிளிநொச்சி குருகுலத்தில் இக்கூட்டம் நடைபெற்றது. பிரஜைகள்குழு உட்பட பல பொதுஸ்தாபனப் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பங்கு பற்றினர்.

இருபதினாயிரம் வங்கிவாடிக்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் 3 கோடி ரூபா பணம் வங்கியில் முடங்கிக் கிடப்பதாகவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப வங்கிக்கிளை திறக்க நடவடிக்கை எடுக்கத் தவறின் மறியல்போராட்டம் முதலான சட்டமறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொசிசி அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதனைச் சந்தித்த கிளிநொச்சிப் பிரஜைகள்குழுவின் தூதுக்குழுவொன்று சந்தித்து மூடப்பட்டுள்ள வங்கிகளை திறக்க நடவடிக்கைள் எடுக்குமாறு வலியுறுத்தியது.

## ஆஸ்பத்திரி வளவினுள் பீரங்கிக்குண்டு

ஊர்காவற்றுறை, திங்கள்

காரைநகர் கடற்படைமுகாமிலிருந்து ஊர்காவற்றுறை நோக்கி நேற்று முன் தினம் காலை மேற்கொள்ளப்பட்ட பீரங்கி.'ஷெல்' தாக்குதலால் வேப்பமரம், பூவரசு மரம் போன்றவை நிலத்தில் முறிந்து விழுந்து கிடந்தன.

பீரங்கிக்குண்டு ஒன்று ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வளவினுள் விழுந்து தெற்குப் பக்கமாகவுள்ள மதிற் சுவரை சின்னாபின்னப் படுத்தியிருக்கிறது

'ஷெல்' தாக்குதலைதொடர்ந்து கரையோரப் பகுதியில் வசித்தமக்கள் பாதுகாப்பிடம் தேடி உடுத்த உடைகளோடு நாரந்தனை, கரம்பன்போன்ற பகுதிகளில்தஞ்சமடைந்தனர்.

## பருத்தித்துறையில் நேற்றும் தாக்குதல்

பருத்தித்துறை' திங்கள்

பருத்தித்துறை கூட்டு பாதுகாப்பு முகாமிலிருந்து நேற்று காலையும் மோட்டார் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றன.

பருத்தித்துறைப் பாடசாலைகள்யாவும் உடனடியாகமூடப்பட்டு மாணவ மாணவிகள் தத்தமது வீடுகளுக்குச் சென்றனர். பருத்தித்துறை மருதடியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தனியார் மினிவான்கள்யாவும் கிராமக்கோட்டிற்குச் சென்றன.

## பிரயாணிகள் நலன்கருதி தங்குமடம்

நெடுந்தீவு, திங்கள்

தீவுப்பகுதிப்பிரயாணிகளின் நலன்கருதி தீவுப்பகுதி பிரயாணிகள் நலன்புரிச் சங்கத்தினால் வேலணை வடக்கு துறைமுகத்தில் நாற்பது அடி நீளமான பிரயாணிகள் தங்குமடம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

துரிதமாகக் கட்டப்பட்டு வரும் இப் பிரயாணிகள் தங்குமடம் பத்துத் தினங்களுக்குள் பூர்த்தியாக்கப்பட்டு விடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

## மரண அறிவித்தல்

### ஸ்ரீபன் பொன்னையா

ஸ்ரீபன் பொன்னையா [Former Director cf Bank Supervision. Central Bank Colombo தற்பொழுது Director of Central Bank Gambia] காலமானார். இவர், திருமதி குயிலவனின் அன்புக்கணவரும், அலோமா, டொறத்தி, ஜோ, யூன், மரீனா ஆகியோரின் தகப்பனாரும், காலஞ்சென்ற திரு. திருமதி P C. பொன்னையா [யாழ் சுண்டுக்குளி] ஆகியோரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற மாகிறற் துரைசிங்கம், பிரான்சிஸ்கா இரத்தினசிங்கம், யாழ். அ ம. தி மா அதிபர் பிதா லூயிஸ் பொன்னையா, விக்ரர், அருட்செல்வி மேரி ஈசா, அருட்செல்வி திரேஸ் கிறேஸ், அருட்செல்வி மரியறெஜினா, வின்சன்ட், ஜோர்ஜ் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். நல்லடகசம் கொழும்பில் நடைபெறும் அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும்.

தகவல்: G. பொன்னையா

[C 4665]

### PAUL RAJANAYAGAM

[Deputy Commissioner, Inland Revenue, Co'ombo.]

அவர்களின் அஸ்தி நல்லடக்க ஆராதனை 17-9-86 புதன் காலை 8 30 மணிக்கு யாழ் அடைக்கலமாதகோவிலில் இரங்கல் பூசைபலிக்குபின்னர் யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

குடும்பத்தினர்
39-3ம், குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C4655)

### திருமதி றேசலின் பவளமணி தருமரத்தினம்

திருமதி றேசலின் பவளமணி தருமரத்தினம் கிறீஸ்துவின் மகிமைக்குள் பிரவேசித்தார் அன்னார் காலஞ்சென்ற வெறம்பில்தம்பு தருமரத்தினத்தின் அன்பு மனைவியாரும, லில்லி, றுபேட் ஒலிவ் ஆகியோரின் சகோதரியும், றேசபெல்லா மகிழ்மலர், எட்வின் அருந்தவ அமிர்தராசா, சா. ஆ தருமரத்தினம் (யா/மாநகரசபை), திருமதி டெய்சி லெறன்ஸ்மென் (சிம்பாப்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சபாரத்தினம், நொவெல் லெறன்ஸ்மென், வர்ணதேவி, சந்திராதேவி ஆகியோரின் மாமியாரும், பாஸ்கரன், சாந்திகரன், விஜேகரன், இரசிகரன், வர்ணன், அமிர்தன, நிம்மா, நிரோ, சாமளன், தயாளன், பவளினி ஆகியோரின் பேத்தியாருமாவார். இன்று 16 9-86 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு உரும்பிராய் றேஸ் இல்லத்தில் நடைபெறும் இறுதி ஆராதனையைஅடுத்து அன்னாரதுபூதவுடல் உரும்பராய், கோப்பாய் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். (C4661)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone: 22389—24126.